Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 323
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஐப்பசி 5 றஜப். 17 ஞாயிற்றுக்கிழமை [22-10-67]

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
டாம் வீதி கொழும்பு

# சூறாவளி அபாயம் இல்லை

## கொழும்பில் 16 பேர் வெள்ளத்துக்குப் பலி

### 25 ஆயிரம் பேர் வீடிழந்தனர்

கொழும்பு, சனி

**இலங்கையின் எந்தப் பகுதியும் சூறாவளியினால் பாதிக்கப்படக்கூடிய அபாயம் இல்லையென்று கொழும்பு வானிலை ஆராய்ச்சி நிபுணர் திரு. ஏகநாயக்கா அறிவித்துள்ளார்.**

இன்று பிற்பகல் கிடைத்த ஒரு செய்தியின்படி நான்கு மணி நேரத்திற்குள் இலங்கையின் தென்கிழக்குப் பிரதேசத்தில் கடுமையான சூறாவளி வீசக்கூடும் என்று கருதப்பட்டது. இத்தகவல் எல்லாப் பொலிஸ் நிலையங்களுக்கும், அரசாங்க அதிபர்களுக்கும் எச்சரிக்கையாய் இருக்கும்படி அறிவிக்கப்பட்டிருந்தனர்.

வங்காளக் கடலில் உருவான காற்றமுத்த மண்டலம் ஒன்று இலங்கையை நோக்கி விரைவதாக முன்னர் கருதப்பட்டது. ஆனால் அப்படியான அபாயம் இல்லையென்றும், ஆனால் மழை நிலைமையில் மாற்றமிருக்காதென்றும் இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் மழையினாலும், வெள்ளத்தினாலும் இதுவரை 16 பேர் மரணமாகியுள்ளதாக அஞ்சப்படுகிறது. 25 ஆயிரம் பேர் வீடுகளையும், உடைமைகளையும் இழந்து நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

சமூகசேவைகள் இலாகாவும், கொழும்பு மாநகர சபை தர்மக் கமிஷனும் நிவாரண வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. தாழ்ந்த பிரதேசங்கள் எல்லாம் நீரில் ஆழ்ந்துவிட்டன.

களனி கங்கையின் நீர்மட்டம் பிற்பகல் ஓர் அங்குலம் குறைந்ததாக அறிவிக்கப்பட்டது. ஆனால் பிற்பகல் உயர்ந்துவிட்டது. கொழும்புக்கும்- ஹன்வலைக்குமிடையில் ரேடியோ தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

துறைமுகத்தில் கடல் கொந்தளிப்பினால் சிறு கப்பல்கள் இடம்பெயர்ந்துள்ளன. கடல் நீர் பல இடங்களில் கரைக்கு மேலே பாய்கின்றது.

கிரேக்க கப்பல் ஒன்று ஹெந்தலைக்கருகில் கஷ்டத்துக்குள்ளானதாக அறிவிக்கப்பட்டது.

## சிலாபம், இரத்தினபுரியில் மோசமான நிலைமை

சிலாபம், இரத்தினபுரி ஆகிய பகுதிகளில் வெள்ளம் படுமோசமாகப் பாதித்துள்ளது.

இரத்தினபுரியில் நிவாரண வேலைகளில் ஈடுபடுவதற்கு சக்தி மிக்க வள்ளங்களை கொழும்பிலிருந்து அரசாங்கம் அனுப்பியுள்ளது.

அப்பகுதி நிவாரணத்துக்கென 20 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. களு கங்கை பெருக்கெடுத்துப் பாய்கிறது. அதன் நீர்மட்டம் நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகரித்துவருவதாக அறிவிக்கப்பட்டது.

## செனட்டர்கள் தெரிவு ஒத்திவைப்பு

கொழும்பு, சனி

செனட்சபையில் காலியாகியுள்ள பதவிகளுக்கான தெரிவு இன்று நடைபெறவில்லை. பல எம். பிக்கள் மழை காரணமாக கொழும்புக்கு வர முடியாமல் போனதே இதற்கு காரணம்.

அரசாங்கக்கட்சியைச் சேர்ந்த எம். பி.கள் தமது செனட் உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான கூட்டத்தை [illegible] வைத்துள்ளனர். பல

(8-ம் பக்கம் பார்க்க)

பல்கலைக்கழகவிவகாரம்

## கல்வி மந்திரி வாபஸ் பெற்றார்

கொழும்பு, சனி

கொழும்பிலுள்ள பல்கலைக்கழகத்தை கொழும்புபல்கலைக்கழகமென்றும், பேராதனையிலுள்ள பல்கலைக்கழகத்தை பேராதனை பல்கலைக்கழகமென்றும் மாற்றி அமைக்க கல்வி மந்திரி திரு. இரியகொல்லை பிரதிநிதிகள் சபையில் தாக்கல்செய்திருந்த பிரேரணையை இன்று வாபஸ் பெற்றுக்கொண்டார்.

இந்தப் பல்கலைக்கழகங்களை இலங்கைப்பல்கலைக்கழகமென்றே அழைக்கவேண்டும் என்று மாணவர்கள் கிளர்ச்சி செய்து வருகின்றனர்.

## 400 மாணவர் செல்லவில்லை

யாழ்ப்பாணம், ஞாயிறு

வட்டுக்கோட்டையிலுள்ள ஒரு கல்லூரியைச் சேர்ந்த சுமார் 400 பட்டதாரி மாணவர்கள் நேற்றுக் கல்லூரிக்குச் செல்லவில்லையெனத் தெரிகிறது.

மாணவர்கள் சிலர் பாடசாலையிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டதைத் தொடர்ந்து கல்லூரியின் விடுதியிலுள்ள சுமார் 170 மாணவர்கள் வகுப்புக்குச் செல்லாது பகிஷ்கரித்ததாகவும் இவர்களுக்கு ஆதரவு தெரிவிக்குமுகமாகவே

மிகுதி 230 மாணவர்களும் நேற்று கல்லூரிக்குச்செல்லவில்லையெனத் தெரியவருகின்றது.

1. யானை மார்க் நம்பர் 1 சீமென்ஸ

ஓடிகொலோன் சிசு பரிபாலிப்புக்கும், நோயாளிகள் அறைக்கும், குளிக்கும் அறைக்கும்.
மறவாதீர்—சீமென்ஸ்.

2. சீமென்ஸ்— வாசனை செவ்விளநீர் தேங்காயெண்ணெயும் ஆமணக்கெண்ணெ கூந்தல் வளர்ம் தைலமும் உங்கள் உரோமத்தை செழிப்பாகவும் சிறப்பாகவும் வளர்க்கும்.

3. சீமென்ஸ் புத்தராஜா தைலம்

தலையிடியை ஒரு நிமிடத்தில் நிறுத்திவிடும். எல்லாவிதமான தலையிடிகளுக்கும் பீநீசம் சம்பந்தமான சகல நோய்களுக்கும் சிறந்த ஔஷதம்.

இலங்கையிலுள்ள சகல பிரசித்திபெற்ற வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

**சீமென்ஸ் பற்பொடி:** தினமும் சீமென்ஸ் பற்பொடியால் உங்கள் பற்களை துலக்குங்கள். பல் சூத்தை முதலிய எல்லா பல், வாய் நோய்களையும் குணப்படுத்தும் ஓர் ஆயுர்வேத தயாரிப்பு. நல்ல பற்களில் சூத்தை தொற்றுதபடி அவற்றை பாதுகாத்து இறுகப்பண்ணும். பற்களை வெண்மையாக்கும் நச்சுக் கலப்பில்லாதது.

ஒரு பாக்கெட் 60 சதம், தபால் செலவு 60 சதம்

**வந்தபின் காப்பதிலும் வருமுன் காத்தல் நன்று**

இதுதான் நிவாரணம்:

**சீமென்ஸ் கடுக்காய் குளிகைகள்**

இவற்றில் ஒரு பாக்கெட்டை வைத்துக்கொண்டு வயிற்றுக்குழப்பம், தலைவலி வரும்போது உபயோகிக்கவும். ஒரு பாக்கட் ரூ. 1 / 20, தபால் செலவு 60 சதம்.

எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

**ஓடி கலோன்**

| | | | |
|---|---|---|---|
| 1 அவுன்ஸ் | 1-25 | தபாற்செலவு | 1-10 |
| 2 ,, | 2-25 | ,, | 1-10 |
| 4 ,, | 4-25 | ,, | 1-70 |

**விளக்கெண்ணெய்**

| | | | |
|---|---|---|---|
| 4 அவுன்ஸ் | 2-00 | தபாற்செலவு | 1-15 |
| 8 ,, | 3-50 | ,, | 1-70 |
| 12 ,, | 4-75 | ,, | 1-90 |
| 24 ,, | 9-00 | ,, | 2-25 |

**கிங் கோகனட் ஒயில்**

| | | | |
|---|---|---|---|
| 4 அவுன்ஸ் | 1-10 | தபாற்செலவு | 1-15 |
| 8 ,, | 2-00 | ,, | 1-70 |
| 12 ,, | 2-90 | ,, | 1-90 |
| 24 ,, | 5-50 | ,, | 2-25 |

**புத்தராஜ தைலம்**

| | | | |
|---|---|---|---|
| 2 அவுன்ஸ் | 1-35 | தபாற்செலவு | 85 சதம் |
| 6 ,, | 3-25 | ,, | 85 ,, |
| 12 ,, | 6-25 | ,, | 1-15 |
| 24 ,, | 12-00 | ,, | 1-70 |

**சீமென் பிரதர்ஸ்,**
**234, 5-ம் குறுக்குத்தெரு,**
**புறக்கோட்டை, கொழும்பு—11**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

விற்பனையாளர்கள்

வீடுகளுக்குச் சென்று தரமான பொருளை விற்பனை செய்வதற்கு படித்த இளைஞர்கள்தேவை. முயற்சியுள்ளவர்கள் நல்ல ஊதியத்தை எதிர்பார்க்கலாம். தொடர்பு கொள்க: நந்தி இன்டஸ்றீஸ் அன்ட் ஏஜென்சீஸ் லிமிடெட், 20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2265

### கல்வி

ஆங்கிலம், கணிதம், தூய கணிதம் ஆகிய பாடங்களில் பாடம் சொல்லிக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். க. ஸ்ரீகாந்தன் ஆசிரியர், 20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2271

### கல்வி

வகுப்புகள்:

B. A., G. A. Q., G. C. E. [A. L.] ஆகிய வகுப்புக்கள் 11-10-67ல் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. புவியியல், வரலாறு, தமிழ், அரசியல், சமஸ்கிருதம், பொருளாதாரம், தூயகணிதம், பிரயோக கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன. யாழ்ப்பாணக் கல்வி நிலையம், [JAFFNA EDUCATION CENTRE], 304/3, ஆசுப்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2269

### மரண அறிவித்தல்

வண்ணார்பண்ணை 41/6, மானிப்பாய் வீதியைச் சேர்ந்த வயிரமுத்து நடராசா காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமச்சடங்கு வில்லூண்டி மயானத்தில் இன்று காலை 10 மணியளவில் நடைபெறும். தயவு செய்து உறவினரும் நண்பரும் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். தம்பி-வயிரமுத்து, இராசையா. 2270


மனோகரா
யாழ்ப்பாணம்
Daily at
4-45, 7-00, 9-45
GO TO
BLAZE

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெய்சங்கர்
நடித்த
நாம் மூவர்

REGAL JAFFNA
Time: 4-45 7-00 p. m.
9-45 p. m.
Victor Buono
in
THE
STRANGLER
(Adults Only)


### பால் பணம் கொடுபடவில்லை

சுழிபுரம், சனி

வலிகாமம் மேற்கு ஐக்கிய பாற்பண்ணைச் சங்கத்துக்கு கடந்த மூன்றுமாதங்களாக அங்கத்தவர்களால் கொடுக்கப்பட்ட பாலுக்குரிய பணம் இதுவரை கொடுக்கப்படவில்லை. எனத் தெரிகிறது பணம் கிடைக்காததால் கால் நடைகளுக்கு வேண்டிய உணவை வாங்கிக் கொள்ள முடியாமல் பெரும் அவதிப்படுகின்றனர்.


3-வது குதூகல வாரம்!

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] — பிளாஸா [வெள்ளவத்தை]
தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு

விஜயா [மட்டுநகர்] — ஸ்ரீகிஷ்ணு [திருமலை]
தினசரி பி. ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு

ராஜ் [நீர்கொழும்பு]
மற்றும் 4 திரைகளில்!

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி
ஜனாதிபதியின் பரிசு பெற்று அநேகரின் பாராட்டையும்
பெற்ற உணர்ச்சியூட்டும் சித்திரம்!

ஜெய்சங்கர் - நாகேஷ் - சுந்தரராஜன்
ஜமுனா - ஷோபா - ஜி. வரலக்ஷ்மி
பேபி பத்மினி இருவேடங்களில் நடித்த



ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்

குழந்தையும் தெய்வமும்

டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு
இசை: எம். எஸ். விஸ்வநாதன்


## விளம்பரம்

### வடமாகாணப் பிரமாணங்கள்

என் 3131 — தற்போதைய நிலைமைகட்கியையக் கூடியதாக, தற்போதுள்ள பிரமாணங்களை மீளவாயும் நோக்குடன், சிறகுவலை பயனுறுத்தல் சம்பந்தமாக வடமாகாணத்தில் அமுலிலுள்ள கடற்றொழிற் பிரமாணங்களைப் புதிதாகப் பரிசிலனை செய்ய எண்ணப்பட்டுள்ளது. தற்போது அமுலிலுள்ள பிரமாணங்கள் வருமாறு:

(1) 1909 டிசெம்பர் 17-இன் 6,346 எண் கொண்ட இலங்கை அரசாங்கச் செய்தி மடலிற் பிரசுரிக்கப்பட்ட, 1909 டிசெம்பர் 16-ந் தேதியப் பிரமாணங்கள்,

(2) 1936 ஜூலை 24இன் 8,236 எண்கொண்ட இலங்கை அரசாங்கச் செய்தி மடலிற் பிரசுரிக்கப்பட்ட, 1936 ஜூலை 20-ந்தேதியப் பிரமாணங்கள்.

(3) 1941 டிசெம்பர் 5-இன் 8,822 எண் கொண்ட இலங்கை அரசாங்கச் செய்தி மடலிற் பிரசுரிக்கப்பட்ட, 1941 நவம்பர் 27-ந் தேதியப் பிரமாணங்கள்,

(4) 1950 டிசெம்பர் 21 இன் 10,193 எண் கொண்ட இலங்கை அரசாங்கச் செய்தி மடலிற் பிரசுரிக்கப்பட்ட 1950 டிசெம்பர் 19-ந் தேதியப் பிரமாணங்கள்.

(5) 1953 ஆகஸ்ட்டு 7-இன் 10,560 எண் கொண்ட இலங்கை அரசாங்கச் செய்தி மடலிற் பிரசுரிக்கப்பட்ட, 1953 ஆகஸ்ட்டு 6-ந் தேதியப் பிரமாணங்கள்.

(6) 1954 செப்தெம்பர் 24-இன் 10,716 எண் கொண்ட இலங்கை அரசாங்கச் செய்தி மடலிற் பிரசுரிக்கப்பட்ட, 1954 செப்தெம்பர் 29-ந் தேதியப் பிரமாணங்கள்.

(2) தற்போதைய பிரமாணங்கள் பின்வரும் கடற்றொழில் அலுவலகங்களிற் பார்வைக்குக் கிடைக்கத் தக்கதாகவுள:

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, பண்டத்தெருப்பு, பருத்தித்துறை, தாளையடி.

பிரமாணங்களின் அச்சடித்த பிரதிகளை, கொழும்பு 1, அரசாங்கப் பதிவுச் சுவடிகள் அலுவலகில், வாங்கலாம்.

3. அமுலிலுள்ள பிரமாணங்கள் தகுந்தனவா, போதுமானவையா, அல்லது ஒவ்வாதவையா என்பதுபற்றி முறைப்பாடு செய்ய விரும்பும் எவரும், தத்தங் கருத்துக்களை எழுத்தில், பதிவுத் தபால் மூலம், கடற்றொழில் இயக்குநர், கிளை எல். என். த. பெ. இல. 531, கொழும்பு 3 என்ற விலாசத்துக்கு, 1967 - 11 - 13 அன்றோ அதற்கு முன்னரோ அனுப்பிவைக்க வேண்டும். (இத்தேதிக்குப் பின் வந்தடையும் முறைப்பாடுகள் கவனத்தெடுக்கப்படமாட்டா)

4. இம் முறைப்பாடுகளை அனுப்புவோருக்கும், மீனவருக்கும், இம்முறைப்பாடுகள் பற்றிய விசாரணை நடாத்துவதற்கான தேதிகள், இடங்கள் ஆகியன பற்றிய போதிய அவகாசமளித்தபின், விசாரணைகள் நடாத்தப்படும்.

பதில் கடற்றொழில் இயக்குநர்,
கடற்றொழில் திணைக்களம்,
கொழும்பு 3.

G P. 249

## 'ஆசிரியர் இடமாற்றம் மாணவர் கல்வியைப்பாதிக்கும்'

உரும்பராய், சனி

''அரசாங்கம் கண்டகண்டபடி ஆசிரியர்களைஇடமாற்றம் செய்வதால் மாணவர்கள் கல்வி மிகவும் பாதிக்கப்படுகிறது. மிகமிக அவசியம் என்று காணப்பட்டால் பாடசாலை அதிபர்களுடன் கலந்து ஒரு சிறுமாற்றம் செய்யலாமேயன்றி அடிக்கடி ஆசிரியர்களை இடம் மாற்றியமையாமல் மாணவர்கள் கல்வி பாதிக்கப்பட்டிருப்பது கண்கூடு. எந்தஓர் ஆசிரியரும் ஒரே பாடசாலையில் தொடர்ந்து சேவை செய்ய அனுமதிக்க வேண்டும்.''

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் சென்ற புதன்கிழமை மாலை நடைபெற்ற பெற்றூர் ஆசிரியர் சங்க மகாநாட்டில் உரை நிகழ்த்திய பெற்றூர் ஆசிரியர்சங்க முன்னாள் தலைவர் திரு. அ. இளையதம்பி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. இளையதம்பி தொடர்ந்து பேசுகையில், ஒவ்வொரு பாடசாலையிலும் அந்தந்த ஊர்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் ஒரு சிலரேனும் கடமையாற்ற வேண்டும். அப்போது தான் தங்கள் ஊர்ப் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் ஊர் ஆசிரியர்கள் கண்ணும் கருத்துமாய் இருக்க வாய்ப்பு ஏற்படும் என்றூர்.

காரியதரிசி தமது வருடாந்த அறிக்கையில், பாடசாலையின் தலைமையாசிரியராகப் பதவியேற்றுள்ள திரு. சு. குமாரசேகரத்தின் திறமையைப்பாராட்டினூர். பாடசாலை அதிபர் திரு. சு. குமாரசேகரம்பேசும்போது உரும்பராயிலிருந்து ஏராளமான பெண் பிள்ளைகள் வெளியில் உள்ள பாடசாலைகளுக்குச் செல்கிறூர்கள். நம்முடைய கிராமத்தில்ஒரு மகளிர் கல்லூரி அமையுமேயானல் அந்தப்பெண்பிள்ளைகள் ஒரு போதும் வெளியில் உள்ள பாடசாலைகளுக்குச் செல்லவே மாட்டார்கள். ஆயிரத்துக்குக் குறையாத இவ்விடத்தில் ஒரு பெண் பாடசாலை அமையுமேயானல் பெண் பிள்ளைகளாவது கற்க முன்வரலாம் என்ருர். மேற்படி வித்தியாசாலையின் எதிர்கால வளர்ச்சி பற்றி திருவாளர்கள் வ. நடேசலிங்கம் ஜே. பி. உட்படப் பலர் பேசினர்.

புதுவருட உத்தியோகத்தர் தெரிவின் போது பாடசாலை அதிபர் திரு. சு. குமாரசேகரம் தலைவராகவும், திருவாளர்கள் அ. சேனாதிராசா, செ. சின்னத்துரை காரியதரிசிகளாகவும், திரு. அ. பஞ்சாட்சரம் தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டனர். இருபத்தொரு பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

### கடத்தல் பொருட்கள்?

வல்வெட்டித்துறை, சனி

வல்வெட்டித்துறைப் பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத்தகவலைத்தொடர்ந்து பொலிஸ் கோஷ்டியொன்று தொண்டமானாற்றிலுள்ள ஒரு வீட்டை சோதனையிட்டபோது கடத்தல் பொருட்களெனச் சந்தேகிக்கப்படும், சரண்டிகள். சேலைகள் முதலியன இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. சந்தேகத்தின் பேரில் அவ் வீட்டிலுள்ள ஒரு நபர் கைது செய்யப்பட்டுப்பின்னர் பிணையில் விடப்பட்டிருந்ததாகவும் தெரியவருகிறது.

### ருமேனியாவில் அயூப்கான்

புக்காரெஸ்ட், ஒக். 21

பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான், ருமேனியாவுக்கு 6 நாள் உத்தியோகபூர்வமான விஜயம் மேற்கொண்டு, இன்று புக்காரெஸ்ட் வந்துசேர்ந்தார். ஜனாதிபதியுடன் பாகிஸ்தான் வெளியுறவு மந்திரியும் கூடவே சென்றுள்ளார்.


தீபாவளி
பண்டிகையை முன்னிட்டு
விசேஷ மலிவு விற்பனை
நடைபெறுகின்றன.
ஸம்ஸியா
1/3, மின்சாரநிலையவீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்.
298

சிங்கம் மார்க்
LION BRAND SANDANADI THYLAM • சிங்கமார்க் •
சந்தனாதித் தைலம்
வாங்கி உபயோகியுங்கள், எங்கும் கிடைக்கும்.
தயாரிப்பாளர்கள்:-
போன்
ப. மு. 6 சன்ஸ்.
88. செட்டியார் தெரு, கொழும்பு 11


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிலிப்பைன்ஸில் புயலும் வெள்ளமும்; 100 பேர் உயிரிழந்தனர்

மணிலா, ஒக். 21
பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட வெள்ளத்தின் விளைவாக, 100 பேர் நீரில் மூழ்கி மாண்டுள்ளனர். வடக்கு மாகாணத்தில், இச் சம்பவம் ஏற்பட்டுள்ளது.

முன்னதாக, கடும் புயல் வீசியதால், 68 பேர் உயிரிழந்தனர். புயல், வெள்ளம் காரணமாக இதுவரை மொத்தம் 168 பேர் இறந்துள்ளனர்.

## போர்மோசாவில் வெள்ளம்

### 60,000 பேர் வீடிழப்பு

### 22 சடலங்கள்; 50 பேர் காணவில்லை

தாய்பெய், ஒக். 21
போர்மோசாவில், அதன் சரித்திரத்திலேயே மிக மோசமான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வெள்ளத்தில், 60,000 பேர் வீடிழந்துள்ளனர். 22 பிரேதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் 50 பேர் காணமற் போய்விட்டதாக நம்பப்படுகிறது.

## மே: ஆசிய விவகாரத்தில் கருத்து ஒற்றுமை

### யூகோஸ்லாவியாவும் பிரிட்டனும்

லண்டன், ஒக். 21
தற்போது பிரிட்டனுக்கு விஜயம்செய்துள்ள யூகோஸ்லாவிய வெளியுறவு மந்திரி திரு. நிக்கொசெக், மேற்கு ஆசியவிவகாரத்தில், பிரிட்டனுக்கும் யூகோஸ்லாவியாவுக்குமிடையே பெரிதளவு ஒற்றுமை நிலவுவதாகக் கூறியுள்ளார்.

இக்கருத்தை, பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி திரு. ஜோர்ஜ்பிறவுணும் ஒப்புக் கொண்டுள்ளார்.

மேற்கு ஆசியாவில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் அனைத்தும் கைவிடப்பட வேண்டுமென்பதும், எல்லா ராஜ்யங்களின் உரிமைகளும் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்பதும், சர்வதேச நீர் நிலைகளில் சுதந்திர கப்பல் போக்குவரத்து அனுமதிக்கப்பட வேண்டுமென்பதுவுமே பிரிட்டிஷ் கொள்கையாகும் எனத் திரு. பிரவுண் தெரிவித்தார்.

## 60 வயதில் கருத்தடை

கம்மம், ஒக். 21
அவர் அறுபது வயது இளைஞர். அவருடைய 19-வது குழந்தைக்கு ஒரு வயது தானாகிறது. அவர் சமீபத்தில் இங்குள்ள குடும்பக்கட்டுப்பாடு முகாமில், அறுவை சிகிச்சை செய்து கொண்டார். கொத்தகுடம் பஞ்சாயத்து சமிதியில் அன்னபரெட்டிபள்ளி என்ற ஊரைச் சேர்ந்த நபர் அவர். ஒரு வேளை, அவருக்கு அரசாங்கத்தின் 'டிரான்ஸிஸ்டர்' ரேடியோப் பரிசு கிடைத்தாலும் கிடைக்கலாம்!

### ஜிப்ரால்டர் பேச்சுக்கள்

லண்டன், ஒக். 21
ஜிப்ரால்டர் விஷயமாக ஸ்பெயினுடன் பேச்சுவார்த்தைகளை மீண்டும்ஆரம்பிக்க பிரிட்டன் சம்மதித்துள்ளதாகத் தெரிகிறது,

## காந்தி தமிழகத்தில் மறுபிறவி எடுத்துள்ளார்?

சென்னை, ஒக். 21
மகாத்மா காந்தி தமிழகத்தில் எங்கோ ஓரிடத்தில் மறுபிறவி எடுத்திருக்கிறார் என்றும், என்றேனும் ஒருநாள் அவர் தம்மைத் தனக்குத் தெரியப்படுத்துவார் என்றும் காந்தியடிகளின் பேரனான கனு காந்தி நம்புகிறார்.



அடுத்த ஆண்டு ஒக்டோபரில் காந்தியடிகளின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அவர் இப்போது தமிழகத்தில் யாத்திரை செய்து வருகிறார். மகாத்மா புதுடில்லியிலுள்ள பிர்லா மாளிகையில் 1948 ஜனவரி 30-ந் திகதி சுடப்பட்டு இறந்ததற்கு முன்னர் கடைசியாகக் கூறியவற்றைப் பற்றிக் கனு காந்தி நினைவு கூர்ந்தார்.

அடிகளார் அப்போது கூறியதாவது: "இனிமேல் நான் வாழ விரும்பவில்லை. இருப்பினும் எனதுபணி இன்னும் முற்றுப்பெறவில்லை. இப்பிறவியில் நான் செய்து முடிக்காததை, ஒரு வேளை அடுத்த பிறவியில் நிறைவேற்றலாம்."

மகாத்மாவிற்குத் தமிழகத்தின் மீதிருந்த மாறாத அன்பைப்பற்றிக் குறிப்பிட்டுவிட்டுத் தாத்தா தன்னிடம் ஒரு முறை இவ்வாறு கூறியதாகக் கனு காந்தி சொன்னார். "தமிழக மக்கள் வறுமைப் பட்டவர்களாக இருப்பதால், அவர்கள் இறைவனின் மக்களாகின்றனர், அவர்களிடத்திலுள்ள எளிமையும், வாய்மை மீதுள்ள பற்றும் என்னுள்ளத்தைக் கவர்ந்து விட்டன. நான் மறுபிறவியெடுத்தால், அம்மக்களில் ஒருவனாகவே பிறக்கவிரும்புகிறேன்." அடிகளாரின் திருச்செய்தியைப் பரப்புவதற்காக வந்திருப்பதாகவும், "எனது உள்ளுணர்வுதான் நான் எதைக்காண வந்திருக்கிறேன் என்பதைக் கூற முடியும்" என்றும் கனு காந்தி கூறினார்.

## மிஸிஸிப்பி ராஜ்யத்தில் சரித்திர முக்கிய தீர்ப்பு

### சிவில் உரிமை வழக்கில் 7 வெள்ளையர் குற்றவாளிகள்

வாஷிங்டன், ஒக். 21
அமெரிக்காவின் தெற்குப் பகுதியிலுள்ள மிஸிஸிப்பி ராஜ்யத்தில், முதற் தடவையாக, சிவில் உரிமைகள் குற்றச்சாட்டுகளின் பேரில், வெள்ளையர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளனர்.

சிவில் உரிமை ஊழியர்களைக் கொலை செய்யச் சதி செய்ததாக 7 வெள்ளையர்களை, வெள்ளையர்களடங்கிய ஜூரிசபை, குற்றவாளிகளாகக் கண்டுள்ளது.

மூன்று வருடங்களுக்கு முன், சிவில் உரிமை ஊழியர்களில் 2 வெள்ளையரும், 1 நீக்ரோவும் கொல்லப்பட்டது சம்பந்தமாக நடைபெற்ற வழக்கிலேயே இந்த 7 வெள்ளையர்களும் குற்றவாளிகள் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த 7 வெள்ளையர்களும் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளித்துள்ள ஜூரிசபையில், 12 வெள்ளையர் இருந்தனர். இவர்களில் 5 ஆண்களும், 7 பெண்களும் அடங்கியிருந்தனர். இவர்கள் 12 பேரும், 15 மணித்தியால விவாதத்தின் பின்னரே, தமது முடிவைத் தெரிவித்தனர்.

குற்றஞ்சாட்டப்பட்ட வெள்ளையர்களில் 8 பேர் விடுதலை செய்யப்பட்டனர். மற்றும் 3 பேர் பற்றி ஜூரி சபை, எவ்வித முடிவுக்கும் வர முடியவில்லை.

குற்றவாளிகளாகக் காணப்பட்ட 7 பேரும், 15 வருட சிறைத்தண்டனை வரை, எதிர்நோக்கியுள்ளனர்.

இத்தீர்ப்பு, மிஸிஸிப்பி சட்ட சரித்திரத்திலே ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியுள்ளது.

## கூட்டுச்சேராக் கொள்கை வளர்ந்து வருவதாக பிரதமர் இந்திரா கருத்து

### கெயிரோவில் பத்திரிகை மாநாடு

கெயிரோ. ஒக். 21
கெயிரோவில் பத்திரிகை மாநாடொன்றில் பேசுகையில் கூட்டுச்சேராக் கொள்கை எவ்வளவோ நெருக்கடிகளூடாகவும் வளர்ந்து வருவதாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறியுள்ளார்.

மேற்கு ஆசியாப் பிரச்னையைத் தீர்க்க இந்தியா தனிப்பட்டமுறையில்சமரச முயற்சி எடுத்து வருகிறதா எனக்கேட்கப்பட்ட போது. அப்படியில்லையென்றும், ஐ. நா. சபையில் மற்ற நாடுகளுடன் சேர்ந்தே இந்தியாவும் முயற்சிகள் எடுத்து வருவதாகவும் திருமதி இந்திரா பதிலளித்தார்.

### வியட்னும் பிரச்னை

அவரது கிழக்கு ஐரோப்பிய மற்றும் நாடுகளின் விஜயங்களின் போது வியட்னும் போருக்கு ஒரு தீர்வு காண்பதற்கான அறிகுறி ஏதாவதுதென்பட்டதா வெனப்பிரதமர் இந்திராவிடம் கேட்கப்பட்டபோது, அப்படி எதுவும் தென்படவில்லையென்றே தாம் கூறவேண்டியிருப்பதாக அவர் தெரிவித்தார்.



### நாஸருடன் பேச்சு

முன்னதாகநேற்றுச்சுமார் 1 1/2 மணி நேரமாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா, ஐ. அ. கு. ஜனதிபதி நாஸருடன் பேச்சு வார்த்தைகள் நடத்தினர். மேற்குஆசியா பற்றியும் இந்திய - ஐ. அ. கு. வர்த்தக கலாச்சார உறவுகள் பற்றியும் இரு தலைவர்களும் விவாதித்தனர்.

மேற்கு ஆசியப் பிரச்னை அரபுமக்களுக்கு ஒரு நீடித்த சோதனை நிறைந்த பிரச்னையாக விளங்குமென்ற கருத்தை இப்பேச்சு வார்த்தைகளின் போது நாஸர் தெரிவித்ததாக அறியக்கிடக்கிறது.

## பத்திரிகை ஆசிரியர் இருவர் கைது

### நேபாளத்தில்

காத்மாண்டு, ஒக். 21
இரு நேபாள தினசரிப்பத்திரிகைகளின் ஆசிரியர்களான திரு, சந்திரலால்ஜா, திரு. மதன்சர்மா ஆகியோரும், மற்றும் இருவரும் நேற்று இங்கு கைதுசெய்யப்பட்டனர். காத்மாண்டுநீதிமன்றம் ஒன்றின் உத்தரவின்பேரில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது என நேபாளத்தின் தேசியசெய்திஸ்தாபனம் தெரிவித்தது.

அவர்கள் கைது செய்யப்பட்டதற்கான காரணம் தெரியவில்லை.

காத்மாண்டுவில் இந்திய எதிர்ப்புத்துண்டுப் பிரசுரங்கள் விநியோகம் குறித்து அவர்களது தினசரிப்பத்திரிகைகளில் வெளியான செய்திக்கு விளக்கம் தருமாறு இரு ஆசிரியர்களையும் கமிஷனர் மூன்று மாதங்களுக்கு முன் கோரியிருந்தனர்.

## ஏடனில் பலாத்காரம்

### 7 பேர் சுட்டுக் கொலை

ஏடன், ஒக். 21
ஏடனில் நேற்று நடைபெற்ற பலாத்காரச் சம்பவங்களின்போது, பிரிட்டிஷ் தூதராலயத்தைச் சேர்ந்த ஓர் அதிகாரி சுட்டுக் கொல்லப்பட்டார். பிரிட்டிஷ் துருப்புகள், 6 அராபியரைச் சுட்டுக் கொன்றன.

## அங்கோலாவில் சண்டை

### 28 பேர் மரணம்

லூவாண்டா, ஒக். 21
அங்கோலாவில், போர்த்துக்கேய துருப்புகளுக்கும், வெளியிலுள்ள அங்கோலா தேசிய அரசாங்கத்துக்குமிடையே ஏற்பட்டமோதல்களில் 20 போர்த்துக்கேயத் துருப்புகள் கொல்லப்பட்டனர். 8 சிவிலியன்களும் உயிரிழந்தனர்.

## வாஷிங்டனை நோக்கி வியட்னும் போர் எதிர்ப்பாளர் ஊர்வலம்

### துருப்புகளும் பொலிஸாரும் விமானமூலம் இறக்குமதி

வாஷிங்டன், ஒக். 21
கலிபோர்னியாவிலுள்ள ஒக்லண்ட் நகரில், நேற்று 10,000 பேருக்குமதிகமானோர், வியட்னும் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

பலாத்காரம் சிறிதளவே இருந்ததாகவும், 7 பேர் மட்டுமே கைது செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இன்று, வியட்னும் போர் எதிர்ப்பாளர்கள், வாஷிங்டனில் ஒரு மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தவிருக்கின்றனர். இந்த ஆர்ப்பாட்டத்திலும், ஊர்வலத்திலும் 100,000 மக்கள் பங்கு பற்றுவர் என எதிர்பார்க்கப் படுகிறது.

இதையொட்டி, அமெரிக்காவின் பல பாகங்களிலிருந்தும், துருப்புகளும் பொலிஸாரும், வாஷிங்டனுக்கு விமானமூலம் வரவழைக்கப்பட்டுள்ளனர். ஆர்ப்பாட்டத்தினல் ஏற்படக் கூடிய எந்த நிலைமையையும் சமாளிக்க அவர்கள் தம்மைத் [illegible] னர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உலகமே கடவுள் மயம். அது நமக்குத் தெரியவில்லை அதனால் துன்பப்படுகிறோம். விருப்பு வெறுப்புகளும் வேற்றுமைகளும்தோன்றுகின்றன. இன்பமும் துன்பமும் மாறி மாறி வருகின்றன. மங்கும் கடவுளையேகாண முடிந்தவர்களுக்கு, இன்பமே எந்நாளும் துன்பமில்லை.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஞூ ஐப்பசிமீ 5வ. (22-10-67)

## மலைநாட்டுத்தேர்தல் கற்பிக்கும் பாடம்

பெல்மதுளையில் நடைபெற்ற இடைத்தேர்தல் முடிவு எதிர்பார்க்கப்பட்டதே. மலைநாட்டிலே, தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டது முதல் இதுவரை பத்துத் தொகுதிகளில் இடைத்தேர்தல்கள் நடந்துள்ளன. இந்தப்பத்தில் ஒன்றிலாவது ஐ. தே. கட்சிவெற்றி பெறவில்லை. எல்லாவற்றிலும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியே வெற்றிபெற்றுள்ளது. ஆகவே பெல்மதுளை தேர்தல் முடிவும் ஐ. தே. கட்சி யுள்ளிட்டு யாருக்கும் வியப்பளிக்க முடியாது.

இந்த நிலைக்குக் காரணமென்ன? தேசிய அரசாங்கம் பொதுமக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டதா? ஸ்ரீலங்கா சுதந்தரக் கட்சி மலைநாட்டுத் தொகுதிகளில் வெற்றி பெற்றுவருவதற்கு விசேஷ காரணமுண்டா? நீர்கொழும்பு இடைத்தேர்தலில் ஐ. தே. கட்சி வெற்றிபெற்றிருக்கையில் மலை நாட்டில் மட்டும் அடுத்தடுத்து தோற்பானேன்? இதைப்பற்றி ஆராய்ந்தால் சிலஉண்மைகள் வெளியாகும்.

மலைநாட்டுத் தொகுதிகளில் இந்தியத் தமிழர் வாக்குரிமை பறிக்கப்பட்டு விட்டதால், இந்திய, தமிழ் துவேஷப் பிரசாரங்களை அதிகமாகச் செய்ய, சிறப்பாக சுதந்தரக்கட்சிக்கு முடிவதாக உள்ளது. பெல்மதுளை இடைத் தேர்தல் பிரசாரத்தில் எதிர்க்கட்சி தலைவர் ஸ்ரீமாபண்டார நாயகா கிளப்பிய கோஷமென்ன? இலங்கையிலிருந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களின் வழியே தென்னிந்தியாவுக்கு அரிசி கடத்திச் செல்லப் படுகிறதென்பது தான். அந்த அம்மாள் இச்சமயம் இதைக்கிளப்பிவிட்ட நோக்கம் வெளிப்படை. இச்சமயம் அரிசியை வெளியேற்றும் துரோகச் செய்கை தமிழரின் உதவியுடன் தேசிய அரசாங்கம் செய்வதாயும் ஆகவே, அக்கட்சியை ஆதரிக்காமல் தேசாபிமானிகளாகிய தங்களையே ஆதரிக்க வேண்டுமென்பது தான்.

இங்கிருந்து அரிசி வெளியேறவில்லை என்று பொலிஸ் அறிக்கைகளும் தெரிவிக்கையில், இதை ஏன் தேசிய அரசாங்கமோ அல்லது அதை ஆதரிக்கும்பத்திரிகைகளோ மறுத்து ஒரு சொல்லும் கூறவில்லை? தமிழரையும், இந்தியரையும் தூற்றிக்கொண்டிருப்பது தான் தேசாபிமானமென்பது கருத்தா? தமிழ்ப் பிரதிநிதிகள் கூட பார்லிமென்டில் இதைப்பற்றி மறுத்து ஒன்றும் ஏன் பேசவில்லை? மறுக்காதவரை இதை உண்மை என்று சிங்களப் பொதுமக்கள் நம்பி, அரசாங்கத்துக்கு மாறாக வாக்குச் செய்திருக்கின்றனர். இனியாவது இப்படி விஷமப் பிரசாரத்துக்கு அரசாங்கமும் அதை ஆதரிக்கும் பத்திரிகைகளும் உடனுக்குடன் மறுத்து தக்க பதில் அளிக்குமா?

மலைநாட்டுத் தமிழருக்கு வாக்குரிமை இருந்திருப்பின், இவ்வித துவேஷப் பிரசாரத்தை எந்தக் கட்சியும் கிளப்பிவிடத் தயங்கும். ஆகவே ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை சீக்கிரத்தில் அமுலுக்குக் கொண்டுவந்து, மலைநாட்டுத்தமிழரில் மூன்று லட்சம் பேருக்கு ஜனநாயக உரிமையை தாமதமின்றி வழங்குவதாயின் மலைநாட்டு அரசியல் நிலைமையில் நல்லபடியான மாறுதல் ஏற்படுவதாக இருக்கும். இன்றேல்துவேஷப்பிரசாரம் செய்பவர்களுக்குத்தான் வெற்றி தொடர்ந்து கிடைக்கும்.

மலைநாட்டுத் தமிழருக்கு வாக்குரிமையை மீண்டும் அளிப்பின், சுதந்தரக் கட்சியும் தனது துவேஷப்பிரசாரத்தை மாற்றிக் கொள்ளக்கூடும். அதுதேசியஒற்றுமைக்கும் அமைதிக்கும் நல்லது.

நடுத்தர வகுப்பினருக்குத் தேவையான உணவுப் பொருள்களின் தட்டுப்பாட்டையும் அரசாங்கக் கட்சிக்கு மாறான பிரசாரத்தில் முக்கியமாகப் பயன் படுத்தியுள்ளனர். சூயஸ் கால்வாய் தடைபட்டதால் பால் உணவு தட்டுப்பாடு ஏற்பட்டது மெய்தான். இதை எந்த அரசாங்கமும் தவிர்த்திருக்க முடியாது. என்றாலும் கூடுமானவரை பால் முதலிய அத்தியாவசிய தேவைகளில் தன் நிறைவு ஏற்படும் படியான திட்டம் அமைத்து அதை பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெற்று அமுல் செய்வதாயின், அது பலவகைகளிலும் நல்லது. அடுத்தடுத்து கிடைத்துவரும் இத்தேர்தல் தோல்விகள், அரசாங்கத்தின் கண்களைத் திறக்கவும், நிலைமையை அடியோடு பரிசீலனை செய்து, வகுப்புவாதத்துக்குச் சற்றும் இடமில்லாமலும், ஜனநாயக தர்மம் காக்கப்படவும், துணிச்சலுடன் ஆக்க முறையில் தக்க நடவடிக்கைகளை எடுக்கத் தூண்டவேண்டும். மலைநாட்டில் ஜனநாயக தர்மத்துக்கு மாறாக தமிழரின் வாக்குரிமையை ஒரே அடியாகப் பறித்த அயோக்கியமான நடவடிக்கைக்கு எவ்வளவு சீக்கிரம் பரிகாரம் செய்யப்படுகிறதோ, அவ்வளவும் அரசியல் தூய்மையடையவும் இங்கு ஜனநாயகம் பலப் படவும் உதவுவதாக இருக்கும்.

'பெற்றோர் ஆசிரியருக்கு

# மரியாதை செலுத்த மாணவர் வெட்கப்படுகின்றனர்'

## உடுப்பிட்டி எம். பி. கவலை

உடுப்பிட்டி, சனி

''ஒரு பாடசாலையையும், அதன் மாணவர்களையும் பேணி வளர்ப்பது இலேசான காரியமல்ல அத்துடன் பல்வேறு. அபிப்பிராயங்களைக் கொண்ட பெற்றோர்களையும் சமாளிக்கும் திறன் வேண்டும். இன்று கிராமங்களிலேயுள்ள தமிழ்ப் பாடசாலைகள் வேலிகளின்றிப் போதிய பாதுகாப்பில்லாமல் இருக்கின்றன. இப்பாடசாலைகளின் சகல பொறுப்புக்களும் தலைமையாசிரியர்களையே சேருமாகையால் அவர்களின் பொறுப்பு எத்தனை கஷ்டமானது என்று எளிதில் உணர முடிகிறது: தலைமையாசிரியர்கள் மீது நாம் வீண் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தும் வழக்கத்தைக் கைவிட்டு ஆசிரியர் சமூகத்தைப் போற்ற முன் வரவேண்டும். சில பெற்றோர் தமது பிள்ளைகள் செய்யும் தவறுகளுக்கு ஆசிரியர் மீதே பழி சுமத்துகின்றனர், இதனால் பெற்றோர் ஆசிரியர்களிடையே பகைமை ஏற்படக்கூடும். மாணவர்கள் தமது தவறுகளைத் தாமே திருத்துவதோடு ஆசிரியர் பெற்றோரிடையே நல்லுறவை ஏற்படுத்த முயலவேண்டும். பண்டைக் காலத்திலே மாணவர்கள் தமது குருவீட்டிலேயே தங்கிக் கல்விகற்றதினால் சிறந்த அறிவையும், நல்ல பழக்கங்களையும் பெற்றனர். இன்று மாணவர்கள் பெற்றோர், ஆசிரியருக்குக் கூட மரியாதை செலுத்த வெட்கப்படுகின்றனர். மாணவர்களின் கல்வித்தரம் உயர்ந்தாலே இலங்கையில்முன்னேற்றப்பாதைசிரடையும்.''

மேற்கண்டவாறு கரவெட்டி சரஸ்வதி மகளிர் வித்தியாசாலையில் பதினைந்து ஆண்டுகள் தலைமையாசிரியையாகக் கடமையாற்றிப் பிரியாவிடை பெற்று 5தினங்களில் மரணமான திருமதி இரத்தினம் வெற்றிவேலு [60வயது] வின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்துக் கரவெட்டி வாணிகலைக் கழகத்தால் நடாத்தப்பட்ட அனுதாபக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் உடுப்பிட்டி எம். பி. யும், பாராளுமன்றக் கமிட்டி உபதலைவருமான திரு. எம். சிவசிதம்பரம் கூறினார்.

ஆசிரியர் திரு. சு. கணபதிப்பிள்ளை பேசுகையில் ''திருமதி இரத்தினம் தமது ஆசிரியைப்பணியை உணர்ந்து செயலாற்றி வந்தார். மாணவர்களை அன்புடன் நடத்திக் கல்விபோதிப்பதில் சிறந்தவராக விளங்கினார்'' என்று கூறினார்.

வாணி கலைக்கழக இயக்குநர் பண்டிதர் க. வீரகத்தி ''காலஞ்சென்ற தலைமை ஆசிரியை ஈழத்தில் ஒரு சாந்திநிகேதனமாக விளங்கிவரும் வாணி கலைக்கழகத்திற்காக அரும்பணி புரிந்துள்ளார். இவருடைய சேவைகளை வாணியும், மாணவர்களும் என்றும் நினைவில் வைத்திருப்பார்கள் என்று சொன்னார்.

பண்டிதை திருமதிமாலோகமணி உட்பட வேறு பலரும் பேசினர். அன்னாரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக இரு நிமிட அஞ்சலி செலுத்தப்பட்டது

## இன்றைய பலன்!

22-10-67

ஞாயிற்றுக்கிழமை

(ஐப்பசி மாதம் 5 வ)

நட்சத்திரம் - ரோகிணி இரவு 11-49 மேல் மிருகசீரிடம்.

திதி- சதுர்த்தி இரவு 11-09 மேல் பஞ்சமி.

சுபநேரம் - 9-02 — 10-32.

ராகுகாலம் - 4-32 — 6-02.

மேஷம்- தூரத்துச் செய்தி, துயரின் நிழலாட்டம்.

ரிஷபம்- நிச்சயமற்ற நிலை, அடக்கமே நன்று.

மிதுனம்- வாக்கில் வசீகரம், வாழ்த்துமுண்டு.

கடகம்- காரியதாமதம், கடன்படநேரிடும்.

சிங்கம் - இனத்தோடு தொடர்பு, நிம்மதி பிறக்கும்.

கன்னி - மக்கள் நலன், மதிப்பும் உயரும்.

துலாம்-இருண்ட மனம், பரபரப்பு.

விருச்சிகம் - அமைதியான இதயம், அன்பின் உதயம்.

தனுசு - வேலையில் தடை, விரக்தி நிலை.

மகரம் - பெரியோரைப் பேண், பேருதவி கிட்டும்.

கும்பம் - பொதுப்பணி, சிரமங்கள் அதிகம்.

மீனம் - சுவை தரும் நிகழ்ச்சி, சுகபோக நாள்.

— சோதிடக்கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

## கொலை செய்யும்...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

மடிவு' கடிதத்தையும் ராதா கொண்டு சென்றார் என வாதத்திற்கு வைத்துக் கொண்டாலும் தனது தற்கொலை முயற்சி தோல்வியடைந்துவிட்டதை உணர்ந்ததும் ராதா ஏன் அக்கடிதத்தை பொலிசாரிடம் ஒப்படைக்க வேண்டும்? என்று ராதா வழக்கறிஞர் கேட்டார்.

இச் சந்தர்ப்பங்களில்'என் மடிவு கடிதத்தை நம்பமுடியாது.

### வழக்கறிஞரிடம் ஏன் போகவேண்டும்

ரிவால்வரைப் பொலிசாரிடம் ஒப்படைக்க முன்னர் வாசு, சக்கரபாணி ஆகியோர் வழக்கறிஞரிடம் சென்றதுபற்றிக் குறிப்பிடுகையில், அச்சம்பவத்தைச் சந்தேகக் கண்ணோடு பார்க்கவேண்டியிருப்பதாக திரு. குமாரமங்கலம் கூறினார்.

முக்கியமான சில விபரங்களை மூடி மறைப்பதற்குச் சட்ட ஆலோசனையை நாடியே இவர்கள் இவ்விதம் நடந்துள்ளார்கள்.

'ஒரு வழக்கறிஞரின்இடம் நீதிமன்றமாகும். துப்பாக்கி கொண்டு செல்லப்பட வேண்டியது பொலிசாரிடம் வழக்கறிஞரிடமல்ல' என்றார் திரு. குமாரமங்கலம்.

நாளை சனிக்கிழமை திரு. குமாரமங்கலத்தின் தொகுப்புரை தொடர்ந்து நடைபெறும்.

## ஐயமாறன் எழுதுவது

தென்னிலங்கையில் மட்டுமல்ல, யாழ்ப்பாணத்திலும் மழை கொட்டுகொட்டென்று கொட்டுகிறது. வான்முகில் வழாது பெய்கின்றது. வெள்ளமும் புயலும் வராமல் தெய்வம் காப்பாற்றவேண்டும்.

இந்த அடைமழையைப் பார்க்கும்போது, ஓர் இஸ்ரேல் ''நிபுணர்'' இங்குவந்து நம்மைப் பயமுறுத்தியது தான் நினைப்பு வருகிறது. வடமாகாணமனைத்தும் சில வருடங்களில் பாலைவனமாகிவிடலாமென்றும், மழை குறைந்து கிணற்று நீரெல்லாம் உப்புநீராகிவிடுமென்றும் நம்மைப் பயமுறுத்தினார். உடனே இங்கு புதிய கிணறுகள்வெட்ட ஏழைகளுக்குப் பணவுதவி அளிக்க முடியாதென்று காருண்ய அரசாங்கம் உத்தரவுபோட்டதாம். அந்த உத்தரவு இன்னும் அமுலில் இருக்கிறதோ தெரியவில்லை.

இப்போது பொழியும் இந்த அடைமழை, அந்த நிபுணரின் 'காபுரு' சோதிடத்தைப் பொய்யாக்கிவிட்டதென்றே தோன்றுகிறது. மழை பொழிவதெல்லாம் யாருடைய கருணை? எவ்வளவோகாலமாகயாழ்ப்பாணத்தைக் காத்துவரும் அந்தக் கருணாநிதி கைவிட்டு விடுவாரா? புதிய கிணறுகள் வெட்டுவதற்கு உதவி இன்னும் மறுக்கப்படின், அந்த அநீதியான தடையை அரசாங்கம் உடனடியாக நீக்கவேண்டுமென்பதையும் கடவுள் நம்மைக் கைவிடமாட்டாரென்பதையும் இக் கருணைமழை நமக்கு அறிவுறுத்துகின்றது.

ஃ ஃ ஃ

மதுரையிலே வைகையாற்றில் வெள்ளம் வந்ததும், கோவில் பூசைகள் ஏதும் தடைபட்டதோ அல்லது நல்லவர் மனம் நோகும்படி எதுவும் நடந்து விட்டதோ என்று பாண்டிய மன்னன் பதறினனும். இதிலிருந்து கோவில் பூசைகள் சரிவர நடவாவிட்டாலும், நல்லவர் உள்ளம் நொந்தாலும் வெள்ளம் முதலிய இயற்கை விபத்துக்கள் வருமென்று ஏற்படுகிறது.

இப்போது தென்னிலங்கையில் ரத்தினபுரி, கொழும்பு முதலிய இடங்களில் பெரும் வெள்ளம் ஏற்பட்டு, பல்லாயிரக்கணக்கான மக்கள் தவிப்பதாகச் செய்திகள் கிடைக்கின்றன. கேட்கும்போதே பரிதாபமாக இருக்கிறது. அங்கு கோவில் பூசை சரிவர நடக்கவில்லையா? நல்லவர்களுக்கு ஏதும் தீங்கு நடக்கிறதா? பாண்டிய மன்னனையின் இதைப்பற்றி விசாரிப்பான். ஆனால் நமது அரசியல் வாதிகள் இதைப்பற்றி எங்கேசிந்திக்கப் போகிறார்கள்?

ரத்தினபுரி சிவன்கோவிலைப்பற்றி ஏதோ கேள்விப்பட்டேன். அங்கு பூசைகள் இப்போது சரிவர நடக்கிறதா தெரியவில்லை.

ஒரே மழைதான். அது ஆக்கவும் செய்கிறது, அழிக்கவும் செய்கிறது. இதற்குக் காரணம் ஏதும் உண்டா? இதனால் நாம் ஏதும் பாடம்கற்று திருந்த முடியுமா? காரணமின்றி காரியமில்லை. கருணையேவடிவான இறைவன், தமது மறக்கருணையால் நமக்கு எவ்வளவு பாடம் புகட்டுகிறான். அதை உணர்ந்து திருந்தினால் நன்மை பெறுவோம். கடவுளே இல்லையென்றும், மழை, புயல் எல்லாம்ஏதோ தற்செயல் என்றும் கருதுபவர்கள் இதைப்பற்றி எங்கே சிந்திக்கப்போகிறார்கள்?

ஃ ஃ ஃ

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம், வீழ்க தண்

(4-ம் கலம் பார்க்க)

[5-ம் கலத் தொடர்ச்சி]

புனல் வேந்தனும் ஓங்குக, ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

— திருஞானசம்பந்த சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம். ஜி. ஆர்.—ராதா வழக்கு

# கொலை செய்யும் நோக்கத்துடன் சென்றால் ஏன் வாசுவை ராதா கூட்டிச் செல்ல வேண்டும்?

## வழக்கறிஞர் குமாரமங்கலம் கேள்வி

சென்னை, ஒக். 21

நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனை ரிவால்வரால் சுட்டுக் கொலை செய்ய முயன்றதாகவும், பிறகு அதே ரிவால்வரால் தன்னைத் தானே சுட்டுக் கொன்று தற்கொலை செய்து கொள்ள முயன்றதாகவும் சினிமா நடிகர் எம். ஆர். ராதா மீது தொடரப்பட்ட வழக்கு இன்று தொடர்ந்து விசேஷ செஷன்ஸ் நீதிபதி திரு. பி. லக்ஷ்மணன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது எதிரி தரப்பு வழக்கறிஞர் திரு. மோகன் குமாரமங்கலம் தொடர்ந்து தமது தொகுப்புரையை நடாத்தினார்.

அவர் கூறியதாவது: 'வியாழக்கிழமையன்று, கோர்ட்டில் வாதித்த வாதி தரப்பு வழக்கறிஞர், ராதாவுக்கு தடைத் தண்டனையாவது அளிக்கப்பட வேண்டுமென்று கோரினார். சமூகத்துக்கு எச்சரிக்கை செய்யு முகமாக, ஒரு தினுசான குற்றத்துக்கு, இத்தகைய தடைத்தண்டனை அளிக்கப்படுவது வழக்கம்.' சினிமா நடிகர்கள் அடுத்தடுத்துக் கொலைகளில் ஈடுபடாதிருக்க வேண்டுமென்ற நோக்கத்துடனே, இத்தகைய தடைத்தண்டனை அளிக்கும்படி புரொசிக்கியூஷன் தரப்பு வழக்கறிஞர் கேட்டாரென திரு. மோகன் குமாரமங்கலம் வினவினார். [சிரிப்பு]

தடைத்தண்டனை வாதம் நாம் பழிக்குப் பழி வாங்கும் காலத்தில், நாம் இருப்பதைக் காட்டுவது போல் அமைந்துள்ளதாகக் குறிப்பிட்ட ராதாவின் வழக்கறிஞர், இன்றைய உலகில் குற்றவாளிக்கும் திருந்தி, சமூகத்தில் மீண்டும் சேரவே சந்தர்ப்பம் அளிக்கப்படுவதாகக் கூறினார்.

### அச்சம் ஊர்ஜிதம்

செஷன்ஸ் நீதிமன்றத்துக்கு வழக்கு வருவதற்கு முன்னரே, அரசு வழக்கில் காட்டும் அதிக அக்கறையையிட்டு இவ்வழக்கைசென்னை ராஜ்யத்துக்கு வெளியே விசாரிக்க வேண்டுமென நாம் கோரியிருந்தோம். முடிக்குரிய வழக்கறிஞர், தமது தொகுப்புரையில் ராதாவுக்குத் தடைத்தண்டனையாவது விதிக்கவேண்டுமென்று கோரியிருப்பது எமது அச்சத்தை ஊர்ஜிதம் செய்துள்ளது என்றார் திரு. குமாரமங்கலம்.

ராதாவுக்குத் தண்டனை எதுவும் அளிக்குமாறு தான் கேட்கவில்லை. ஏனெனில் அவர் குற்றவாளியல்ல வென்று திரு. குமாரமங்கலம் மேலும் கூறினார்.

எம். ஜி. ஆரும், ராதாவும், வாசுவும் சம்பவம் நடந்த இடத்தில் இருந்தது. சம்பவம் நடந்த நேரம், இடம், சம்பவத்தின் போது 'வெப்ஸ்கொட்' ரிவோல்வர் ஒன்று பாவிக்கப்பட்டது. இவை பற்றி சர்ச்சை எதுவுமில்லை. ஆனால், சம்பவத்தைச் சூழ்ந்திருந்த சந்தர்ப்பங்கள் முற்றிலும் மாறானவை. புரொசிக்கியூஷன் தரப்பினர் நிரூபிக்க முயன்றது தோல்வியடைந்து விட்டது.

எம். ஜி. ஆரைச் சுடவேண்டுமென்று, முன் கூட்டியே திட்டமிட்டு எம். ஜி. ஆர். தோட்டத்துக்குச் சென்று அங்கு எம். ஜி. ஆரை எதிரி சுட்டதென்பதே புரொசிக்கியூஷன் வாதமாகும்.

இழுபறிப்படும் போது, எதிரி சுட்டு விட்டாரென்பதே எதிரி தரப்பினராகிய எமது வாதம்.

### இரண்டு வாதங்கள்

இரண்டு வெவ்வேறு வாதங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இவை இரண்டையும், மிகக் கவனமாக, நிதானமாக ஆராய்ந்து யார் கூறுவது பொய் என்பதை அறிந்து கொள்ள வேண்டியது கோர்ட்டின் கடமை. இரு நடிகர்களும் சாட்சிக் கூண்டில் உண்மையைப் பேசினார்களா அல்லது நடித்தார்களா என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

எம். ஜி. ஆரைச் சுடுவதற்கான எதிரியின் நோக்கங்களில் அரசியல் வேற்றுமை தவிர தொழில் முறைப்பொறாமை, பணக்கஷ்டம் ஆகியனவும் பிரொசிக்கியூஷன் தரப்பில் குறிக்கப்பட்டன. அரசியல் நோக்கத்துக்கு ஆதாரமாக பெரியார் திடலில் ஜன. 25-ம் திகதியில், ராதா ஆற்றிய பேச்சு காட்டப்பட்டது. பணக்கஷ்டம் பற்றி நிரூபிக்க, கொடுக்க வேண்டிய கடன் தொகைகள், செலுத்தப்படாத வருமான வரி விபரம் இவை தரப்பட்டன.

அரசியல் நோக்கத்தை எடுத்துக் கொண்டால், கொலை செய்வதற்கு எம். ஜி. ஆரைப் பொறுக்கியெடுக்க வேண்டிய காரணம் எதுவும் எதிரிக்கு இல்லை. எம். ஜி. ஆர்., தி. மு. கழகத்தில் ஓர் அங்கத்தவரென்றாலும், அச்கட்சியின் முக்கிய போராட்டங்களிலும் அவர் கலந்து கொள்ளவில்லை. இந்திய அரசியற் சாஸனத்தைக்கட்சித் தலைவர் திரு. அண்ணாதுரை எரித்துக்கொண்டிருந்த சமயம், எம். ஜி. ஆர். கோவாவில் படச்சண்டைக் காட்சிகளில் ஈடுபட்டிருந்தார்.

நிதி நெருக்கடியினால் எதிரிக்கு விரக்தி ஏற்பட்டிருந்தால், எம். ஜி. ஆரைக் கொலை செய்வது, அவரது பிரச்னையைத்தீர்க்க முடியாது. அதற்கு, அவர் சட்ட உதவியையே நாடுவார்.

### 'குமுதம்' கட்டுரை

எம். ஜி. ஆரின் குடும்ப டாக்டர் சுப்பிரமணியத்தின் 'குமுதம்' கட்டுரை பற்றித்திரு. குமாரமங்கலம் குறிப்பிடுகையில் அக்கட்டுரையில் தாம் எம். ஜி. ஆரைப் பார்க்க சம்பவ தினமன்று, மாலை 6 மணியளவில் ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்குச் சென்றதாக டாக்டர் சுப்பிரமணியம் தெரிவித்திருப்பதாகக் கூறினார். ஆனால், பிரொசிக்கியூஷன் தரப்பினர், டாக்டர் 7 மணியளவில் தான் அங்கு சென்றாரென்பதை நிரூபிக்கப்பிரயத்தனம் செய்தனர். இது அவர்கள் ஏதோ ஒன்றை மூடிமறைக்க முயல்வதையே காட்டுகிறது. டாக்டர் 7 மணியளவில் பொலிசாரிடம் வாக்குமூலம் அளிக்க முன்னர் எம். ஜி. சக்கரபாணி எம். ஜி. ஆர். ஆகியோருடன் பேசியிருக்கிறார் என்ற உண்மையை மறைக்கவே அவர்கள் முயன்றுள்ளார்கள் எனத்திரு. குமாரமங்கலம் கூறினார்.

### எம். ஜி. ஆருக்கான நோக்கம்

கொலை முயற்சிக்கான நோக்கம்பற்றித்திரு. குமாரமங்லகம் குறிப்பிடுகையில் 'ராதாவைச் சுடுவதற்காக எம். ஜி. ஆருக்கு ஏதாவது நோக்கம் உண்டா?' என்று கேட்டுவிட்டு, 'ஆம்' உண்டு என்றார்.

புரொஸிககியூஷன்தரப்பினர் கூறும்நோக்கத்துக்கும் எதிரி தரப்பினர் நோக்கத்துக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. முன்னது முன் கூட்டித் திட்டமிடப்பட்ட நோக்கம் பின்னது, சடுதியாக ஏற்பட்ட நோக்கம்.

பத்திரிகைகளில் [நாத்திகம்] கட்டுரைகள் தன்னைப்பற்றி அவரூக எழுதப்பட்டதையொட்டி எம். ஜி. ஆர். ஆத்திரம் வைத்திருந்தார் என்று ராதா வழக்கறிஞர் கூறினார். எம். ஜி. ஆரின் நோக்கம் ராதாவின் நோக்கத்தை விட புரிந்து கொள்ளக்கூடிய தொன்றாகும் என்றும் அவர் கூறினார்.

### ஏன் வாசு?

எம். ஜி. ஆரை ராதா சுட விரும்பினால் தன்னுடன் கூடவே ஒரு நேரடிச்சாட்சியாக வாசுவைஅவர் அழைத்துச்சென்றிருக்க வேண்டிய அவசியமில்லை.

எம். ஜி. ஆர். அளித்தசாட்சியத்திலேயே - அவரது தோட்டத்துக்கு ராதா விரும்பியநேரம்போகமுடியுமென்பது தெளிவாகியுள்ளது. ஆகவே அவர் எம். ஜி. ஆர். தோட்டத்திற்கு நேரே சென்று அவரை அழைத்திருந்தால், அண்ணன் எனக் கருதி மரியாதை செய்யும் ராதாவின் அழைப்பிற்கு எம். ஜி. ஆர். வெளியேவந்திருப்பார். அப்போது ராதா அவரைச் சுட்டுவிட்டுச் சென்றிருக்கலாம்.

தனது செயலுக்குநேரடிச் சாட்சியாக வாசுவையும் ராதா கூட்டிச் சென்றார் எனக் கூறுவது, நடக்க முடியாததும், சுத்த முட்டாள்தனமுமாகும்.

### வாசுவின் வாக்குமூலம்

ஒரு முக்கிய சாட்சியான வாசுவின் சாட்சியம் ஏன் உடனடியாகப் பதிவு செய்யப்படவில்லை என்பது பற்றி திரு. குமாரமங்கலம் சந்தேகம் தெரிவித்தார். வாசு சம்பவத்தை நேரில் கண்டவர் என்ற முறையில். ஒரு நேரடிச் சாட்சியாவார். முன்னதாகக் கிடைக்கும் சந்தர்ப்பத்திலேயே பதிவு செய்யப்பட வேண்டிய வாசுவின் வாக்குமூலம் பின்னர் அவர் 7 மணியளவில் பொலிஸாரிடம்ரிவால்வரை ஒப்படைத்த போதும்கூடப் பதிவு செய்யப் படவில்லை. 17 மணித்தியாலங்களுக்குப் பின்னரே, அவருடைய வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

ராதாவை வழக்கில் சம்பந்தப்படுத்தி, எம். ஜி. ஆரை விடுவிப்பதற்கென என்ன என்ன சொல்லவேண்டும் என்பதில் 17 மணி நேரம் பயிற்சிஅளிக்கவே இவ்விதம் வாசுவின் வாக்குமூலம் தாமதமாகப் பதிவு செய்யப் பட்டதென திரு. குமாரமங்கலம் கூறினார். எம். ஜி. ஆருக்குச் சாதகமாகச் சாட்சி அளிக்காவிட்டால் வழக்கில் வாசுவும் சம்பந்தப் படுத்தப்படுவார் எனப்பயமுறுத்துவதன்மூலமே இது செய்யப்பட்டது.

முக்கியமான பொலிஸ் சாட்சியான ராமதாஸ் என்பவர் கோர்ட்டில் விசாரிக்கப்படவில்லை. இவரது சாட்சியத்தின்மூலம், சம்பவம் பற்றி முதலில் தெரிவித்தவர் யார் என்பது வெளிவந்து விடுமென்ற பயமே இதற்குக் காரணம். தகவல் கிடைத்ததும் சப் இன்ஸ்பெக்டர் தான்வார், உதவிப் பொலிஸ் கமிஷனரிடம் அறிவித்திருந்தார். இந்த உதவிப் பொலிஸ் கமிஷனரும் விசாரிக்கப்படவில்லை.

### என் முடிவு'

'என் முடிவு' என்ற கடிதம் பற்றிக் குறிப்பிடுகையில் அது ராதாவினால்தான் எழுதப்பட்டது என்பது நிரூபிக்கப் படவில்லையென்றார். திரு. குமாரமங்கலம் வழக்கு முழுவதும் 'தாள்கள்' என்றேகுறிப்பிடப்பட்டு வந்துள்ளது. ராதாவுக்கு வெற்றுத் தாள்கள் கொடுக்கப் ட்டது என்பதையே நிரூபிக்கிறது. ராதாவின் கையொப்பத்துக்கு மேல், நாத்திகம் கட்டுரைகளில் இருந்து சில பகுதிகளையும்சேர்த்து, என்முடிவு' எழுதப்பட்டதாக திரு. குமாரமங்கலம் கூறினார்.

எம். ஜி ஆரைக் கொன்றுவிட்டுத் தானும் தானும் தற்கொலை செய்யும் நோக்கத்துடன் தன்னுடன் 'என்

[4-ம் பக்கம் பார்க்க




தலைவலி, தடிமல், டெங்குச் சுரம், காய்ச்சல், பல்வலி, இவற்றிலிருந்து துரிதமான, பாதுகாப்பான, வன்மையான நிவாரணம் தந்து, தசை நார் வலிகள் நோவுகளைத் தணிப்பது டிஸ்பிரின்.

டிஸ்பிரினின் கூட்டுப் பொருள்கள், நிச்சயமாகவே வன்மையான பாதுகாப்பான நிவாரணம் தந்திருக்கின்றன. அதனால் தான் உலகெங்குமுள்ள டாக்டர்கள் டிஸ்பிரினை நம்பிக்கையுடன் சிபாரிசு செய்கிறார்கள்.

டிஸ்பிரின், முற்றாகக் கரைவதும் இரத்தோட்டத்தில் உடனே செறிவதுமாகையால், அதி துரித நிவாரணம் தருகிறது.




டிஸ்பிரின் பாதுகாப்பான துரித நிவாரணத்துக்கென விசேஷமாக உருவாக்கப்பட்டது.

RC165

ரெக்கிட் அன்ட் கொலமன் தயாரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அரசாங்கவேலையை நம்பாது தொழில்களில் ஈடுபடுங்கள்'

## உரும்பராய் த. அ, வா. மு. வரவேற்பில் இராசதுரை

உரும்பராய், சனி

அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்திருந்த மட்டக்களப்பு முதல் எம். பி.யும்,மட்டுநகர் மாநகர சபை மேயருமான திரு. செ. இராசதுரைக்கு, உரும்பராய் தமிழரசு வாலிப முன்னணி, உரும்பராய் ஞானோதய சன சமூக நிலையத்தில் ஒரு வரவேற்பு விழா நடத்தியது. கட்சிக்கிளைத் தலைவர் திரு.வ.நடேசலிங்கம் ஜே. பி.தலைமை வகித்தார்.

இவ்விழாவில் கலந்து கொண்டு பேசிய கோப்பாய் எம்.பி. திரு.சி.கதிரவேற்பிள்ளை , தீண்டாமை ஒழிப்பது கட்சியின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றென்றும், கட்சியின் கட்டளைக் கிணங்கவே தாம் செயற்படுவதாகவும் கூறினர்.

பின்னர், உரும்பராய் வாலிப முன்னணிக்காரியதரிசி திரு. அரியரத்தினம் வரவேற்புரை வாசித்தளித்தார்.

தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப்பேசுகையில், இளைஞர்கள் அரசாங்க நாற்காலிகளை நம்பியிராமல் கமத்தொழில்,கடற்றொழில் ஆகியவற்றில் ஈடுபடவேண்டுமெனத் திரு. இராசதுரை கேட்டுக்கொண்டார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 22-10-67

[செய்திகள்:-காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00].

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 8-00நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 குரல்வகை.

இரவு 6-15 தாளவாத்தியக்கச்சேரி, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 பாவளம், 7-30 நேயர் கடிதங்கள், 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி — டி. எஸ். மணி பாகவதர்.

## பஸ் பிரயாணிகள் கோரிக்கை

பண்டத்தரிப்பு,சனி

காரைநகர்—கீரிமலை பஸ் சேவையைப் புதுப்பித்து ரயில் போக்கு வரத்துச் சேவையுடன் இணைப்புச் சேவை நடத்தும் வகையில் ஒழுங்குகள் மேற்கொள்ளுமாறு சண்டிருப்பாய் சேந்தான் குளம் பஸ் பிரயாணிகள் சங்க கூட்டத்தில் கோரிக்கைவிடுக்கப்பட்டது

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம்,ஞாயிறு

இரசிகமணி கனக.செந்திநாதனின் 50 வயது பூர்த்தியாவதை முன்னிட்டு யாழ் இலக்கிய வட்டத்தினர்இம் மாதம் 24-ம் திகதி அவருக்கு ஒரு பாராட்டு விழா நடாத்தவிருக்கின்றனர். குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் நடைபெறும் இவ் விழாவுக்கு திரு.ஏ.ரி. பொன்னுத்துரை தலைமை வகிப்பார்.

திரு. கனக.செந்திநாதன் எழுதிய 'வெண்சங்கு' என்னும் சிறுகதைத் தொகுதியும், ''பிரபந்தப் பூங்கா'' என்னும் கட்டுரைத் தொகுதியும் இவ் விழாவில் வெளியிடப்படும். ''இரசிகமணி மலர் மாலை'' என்னும் நூல் ஒன்றும் இலக்கிய நண்பர்களால் இவ் விழாவில் வெளியிட்டு வைக்கப்படவிருக்கின்றது.திரு. கனக. செந்திநாதனைப் பற்றி இதுவரை பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகள் இம்மலர் மாலையில் சேர்க்கப்பட்டிருக்கும்.

[ந.நி.]

## ஆஸ்பத்திரி தொழிலாளர் சங்க உறுப்பினர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். அரசினர் ஆஸ்பத்திரி தொழிலாளர் சங்கப் பொதுக் கூட்டம் தலைவர் பி. கந்தையாவின் தலைமையின்கீழ் நடைபெற்றது. பின்வருவோர் சங்க உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப் பட்டார்கள். தலைவர் இ. புஷ்பராசா, உப தலைவர்: திரு. யோ. பிச்சன், காரியதரிசி: திரு. ச. நாகராசா, உபகாரியதரிசி: திரு. கி. பாலசுந்தரம், தனாதிகாரி; திரு. சி. மநதப்பு, உப தனாதிகாரி: திரு. க. கனகன்.

# நெல்விளைச்சலை அதிகரிக்க காரியாதிகாரி கூறும் யோசனை

[வவனியா,சனி

''சகல விவசாயிகளும் விவசாயத்தில் ஈடுபட எல்லா கிராம உத்தியோகத்தரும் இரவு பகலின்றி கடமை செய்ய வேண்டும். கடமை செய்யும்பொழுது செய்யும் தொழிலே தெய்வம் என்ற அடிப்படையில் கடமையாற்ற வேண்டும்.விவசாயிகள் குறிப்பிட்டஅளவு பசளைபாவிக்கிறார்களே எனபொறுப்பான உத்தியோகத்தர்கள் பார்வையிடவும் வேண்டும். இப்படிச்செய்தால் கண்டிப்பாக 80 புசல் நெல் ஓர் ஏக்கரில் விளைவிக்கலாம்.''

இவ்வாறு வவனியா தமிழ் பகுதி காரியாதிகாரி திரு. என்.பூரணலிங்கம் கிராம சேவகர்களையும், கிராம அடிப்படை உத்தியோகத்தர்களையும் கொண்ட ஒரு மகாநாட்டில் குறிப்பிட்டார்.

திரு. பூரணலிங்கம் மேலும் பேசுகையில் வவனியாவில் இன்று பல விவசாயக்குழுக்களும் கூட்டுறவுப்பசளைச் சங்கங்களும் விவசாய இயந்திரக்கருவிகள் வாங்கியுள்ளன இவற்றால்சகலவிவசாயிகளும் பயன்படத்தக்க வகையில் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று தெரிவித்தார்.

## கோவிலில் திருட்டு

உடுப்பிட்டி, சனி

வடமராட்சியில் ஆலயங்களில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டிவருகின்றனர்.

கரவெட்டி வடக்கு வதிரி உல்லிய நெல்லை அம்மன் ஆலயத்தில் ஓடு பிரித்துத் திருட்டு நடைபெற்றுள்ளது. இத்திருட்டில் விலைமதிப்புள்ள பல பொருட்கள் களவு போய் விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சில பொருட்களைத் திருடர்கள் மூடையாகக் கட்டிவைத்து விட்டு ஓடி விட்டார்களாம். இத்திருட்டுச்சம்பந்தமாகப் பருத்தித்துறை பொலிஸார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

கரணவாய் வடக்குநவிண்டில் முத்துமாரி அம்மாள் ஆலயத்திலும் திருட்டு நடைபெற்றுள்ளதாக அறியப்படுகிறது.

## இப்படியும் ஒரு ஏமாற்று?

உடுப்பிட்டி,சனி

நெல்லியடியிலுள்ள கடையொன்றில் வேஷ்டியும்,பனியனும் அணிந்திருந்த நபரொருவர் மல்லி இருக்கிறதா என்று விசாரித்தாராம். கடைக்காரர் தம்மிடம் மல்லி இருப்பதாகக் கூறவே ஆறு இருத்தல் மல்லி தருமாறு அந்நபர் கடைக்காரரைக் கேட்டாராம். கடைக்காரர் மல்லியைக் கொடுத்தவுடன் அவ் இனந்தெரியாத நபர் தான் ஒரு விலைக்கட்டுப்பாட்டதிகாரி என்று பயமுறுத்தவே பயமடைந்த பிரஸ்தாப கடைக்காரர் ஆறுஇருத்தல் மல்லியையும் இனமாகக் கொடுத்து சிறு தொகைப் பணமும் சன்மானமாகக் கொடுத்தாராம். பணத்தையும்,மல்லியையும் வாங்கியவுடன் அந்நபர் மாயமாய் மறைந்து விட்டதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.




பெரும்பாலான பற்கள் ஈறு வியாதிகளினால் இழக்கப்படுகின்றன

அரைவாசிக்கு மேற்பட்ட சிறுவர்களும் கிட்டத்தட்ட எல்லா இளைஞர்களும் ஈறு அழுகல் காரணமாக தமது பற்களை இழக்கின்றனர் என உலகச் சுகாதார நிபுணர்கள் ஒத்துக்கொள்ளுகின்றனர். பெரும்பாலான பற்கள் அழுகியல்ல ஆனால் ஈறு வியாதியினாலேயே இழக்கப்படுகின்றன என இவர்கள் கூறுகின்றனர்.

உறுதியான ஆரோக்கியமுள்ள ஈறுகளிலிருந்தே சிறுவர்களுக்கு உரமான வெண்ணிறப் பற்கள் வளரும். தினமும் போர்ஹான்ஸ் கொண்டு ஈறுகளைத் தேய்த்து பல் துலக்குவதால் ஈறுகள் உரமாகவும் உறுதியாகவும் வளரும். அத்தோடு, பற்களும் சுத்தமாயும் வெண்மையாயும் இருக்கும்.

இளமையில் நன்முறையில் கவனிக்காது விட்டபடியால்தான் பெரும்பாலான இளைஞர்கள் ஈறுவியாதிகளினால் துன்பப்படுகின்றனர். இதற்கு தினமும் போர்ஹான்ஸ் பற்பசை கொண்டு பல்துலக்குதல் அவசியம். இதனால் அவர்களது ஈறுகள் உறுதியாவதோடு பற்களும் வெண்மையாகவும் சுத்தமாகவும் இருக்கும்.

ஒரு பல்வைத்தியரின் குறிப்புக்குத் தயாரிக்கப்பட்டது போர்ஹான்ஸ்

புகழ் பெற்ற பல் வைத்தியரான டாக்டர் ஆர். ஜே. போர்ஹான்ஸ் டி. டி. எஸ். என்பவரின் தயாரிப்பு முறைக்கு ஈறுகளை உரமாக்கவல்ல விசேட மருந்துகளைச் சேர்த்து தயாரிக்கப்பட்டது.

எந்தவொரு முறையினாலும் பற்களை உரமாயும் வெண்மையாயுமோ, ஈறுகளை உறுதியாயும் ஆரோக்கியமாயுமோ வைத்திருக்க முடியாது. ஈறுகளைத் தேய்த்து பற்களைச் சுத்தம் செய்ய போர்ஹான்ஸ் போன்ற ஒரு விசேட தயாரிப்பு முறை அவசியம்.

ஆரோக்கியமான ஈறுகளிலிருந்தே உரமான பற்கள் வளரும். ஈறுகள் எவ்வளவு காலத்திற்கு உறுதியாயும் ஆரோக்கியமாயும் இருக்கின்றனவோ அவ்வளவு காலத்திற்கு இவை உரமாயும் இருக்கும். போர்ஹான்ஸ் பாவிப்பது ஆரோக்கியமான ...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி. ஸி. ஈ. மாணவருக்கு........

## தமிழ் மொழி

('அ' பாடத் திட்டம்)

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணம்) பரீட்சைக்கு ஆயத்தஞ் செய்யும் மாணவர் பயின்று பயனடையும் பொருட்டு இப்பகுதி இங்கு ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இங்கே காணப்படும் கேள்விகளுட் சில வற்றுக்கான விடைகளுக்கு எதிர்வரும் 26-ந் திகதி 'ஈழநாடு' இதழைப் பாருங்கள்.

## ......சில மாதிரி வினாக்கள்

1 பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிக:—

[i] நீர் உமது பாடசாலை மாணவர் மன்றச் செயலாளர் எனக் கற்பனை செய்து வருடாந்தக் கூட்டத்தில் வாசிக்கக்கூடிய அறிக்கையொன்று தயாரிக்குக,

[ii] 'பாடசாலைகளில் விவசாயக்கல்வி' என்பதுபற்றிக் கட்டுரை எழுதுக.

[iii] 'கூட்டுக் கல்வியினால் நன்மைகளுண்டு. இதற்குச் சார்பாகவும் எதிராகவுமுள்ள கருத்துக்களை எழுதி உமது அபிப்பிராயத்தை எழுதுக.

[iv] ''ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்'' என்பதை அடிப்படையாக வைத்து ஒரு கதை எழுதுக.

[v] இலங்கையில் உணவுப் பொருள் பற்றாக்குறையைச் சீர் திருத்துவதற்காக நீர் கூறும் ஆலோசனைகளை எழுதுக.

[vi] நீர் படித்துச் சுவைத்த நூலொன்றினைப்பற்றி விமரிசனம் எழுதுக.

2. பின் வரும் உரைப் பகுதியின் சாரத்தை மூன்றிலொரு பங்காகச் சுருக்கியெழுதுக:

உலகம் நாடோறும் மாறுதலடைந்து வருகிறது. மரங்கள் வளர்கின்றன; சாய்கின்றன. விலங்குகள் பிறக்கின்றன; சாகின்றன. மனிதனும் பிறக்கிறான்; இறக்கிறான். தாவரமுதல் மனிதனீறாக உள்ள பொருள்கள் எல்லாந் தோன்றி மறைவதைக் கண்கூடாகக் காண்கின்றோம். இறப்பும் பிறப்பும் இவ்வுலகில் என்றும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இறப்பு நிற்குங் காலமும் பிறப்பு நிற்குங் காலமும் உண்டோ என்னும் ஆராய்ச்சியும் உலகத்தில் நடைபெறுகிறது. உலகத்திற் சின்னாள் வாழ்ந்து மறையும் மக்கள் நினைப்பனவும் பேசுவனவும் செய்வனவும் அளப்பரியனவாம். மனிதன் ஆகாயக் கோட்டையைக் கட்டிக்கட்டி அழிகிறான். எம்மனிதனுஞ் சில குறைகளை உடையனாகவே வாழ்கிறான். குறையின்றி வாழும் மக்களைக் காண்டல் அருமை.

குறையுடைய மனிதன் தன்குறையை நிறைவு செய்தற்கு எண்ணாத எண்ணங்களை எண்ணி ஏங்கி முடிவில் இறந்து போகின்றான். உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் எண்ணும் எண்ணம் ஆகாயம்போல் விரிந்து நிற்கிறது. இவ்வளவு எண்ணங்களை எண்ணுமிவன் எங்கே செல்கிறான்! அந்தோ!

உலகத்தில் மனிதன் எதற்காகப் பிறந்தான்] வீணான எண்ணங்களை எண்ணி இறந்துபடவோ? இறந்துபடவே மனிதன் பிறந்தான் என்று சொல்லல் முடியாது. வேறொரு காரணத்திற்காகவே மனிதன் பிறக்கிறான், அக்காரணத்தை ஆராய்ந்து காண்டல் வேண்டும். அவ்வாராய்ச்சிசெய்து காரணங் கண்ட முன்னோர் வரலாற்றையும் அவர்தம் அநுபவமொழிகளையும் நோக்கல் வேண்டும். புத்தர், கிறீஸ்து, மகம்மது, திருவள்ளுவர்முதலிய பெரியோர் உலகத்திற்கு என்ன அறிவுறுத்தியிருக்கிறார்?, 'மனிதன் மரம் போல வளர்ந்து மாள்வதற்குப் பிறக்கவில்லை' என்னுங் கருத்தைப் பல மூலமாகக் காலதேச வர்த்தமானத்துக்கு ஏற்றவாறு அவர் வெளியிட்டுளர். அவர் கருத்து வழி நடந்தால், மனிதன் தன் பிறப்பு நோக்கத்தை உணர்வான்.

3. பின்வருஞ் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக:

உடுத்த ஆடை அரிந்திருப்பது கண்டு தமயந்தி ஏங்குதல்.

[i] உடுத்த துகிலரிந்த
தொண்டொடியாள் கண்டு
மடுத்த துயிலான் மறுகி-
அடுத்தடுத்து
மன்னேயென அழைப்
பாள் மற்று மவனைக்காணு
தென்னேயிஃ தென்
னென் றெழுந்து.

[ii] வெய்ய தரையென்
னும் மெல்லமளியைத்
தடவிக்
கையரிக் கொண் டெவ்
விடத்துங் காணமல்-
ஐயகோ
என்னப்போய் வீழ்ந்தாள்
இனமேதி மென்கரும்
பைத்
தின்னப்போ நாடன் திரு.

மேதி - எருமை.

[iii] அழல் வெஞ்சிலை
வேடன்
அம்புருவ வாற்று
துழலும் களி மயில்போல்
ஓடிக் - குழல்வண்
டெழுந் தோடவீழ்ந்தாள்
இருகுழைமேற்கண்ணீர்க்
கொழுந்தோட வீமன்
கொடி.

(iv) வான் முகிலும்
மின்னும்
வறுநிலத்து வீழ்ந்தது
போல்
தானும் குழலும்
தனிவீழ்ந்தாள் - ஏனம்
குளம்பான் மணிகிளைக்கும்
குண்டு நீர் நாடன்
இளம்பாவை கைதலை
மேல் இட்டு

ஏனம் - பன்றி

[அ] இச் செய்யுள்களின் கருத்தைத் தொகுத்தெழுதுக.

(ஆ) குழல், அமளி, வெய்யதரை, துயில், மறுகிஇச் சொற்கள் ஒவ்வொன்றினதும் பொருளைக்குறிக்கும் வேறு சொற்கள் ஒவ்வொன்றுஎழுதுக.

[இ] அம்புருவவாற்றுதுழலும், வெஞ்சிலை, ஒண்டொடியாள், இஃதென்னென்றெழுந்து. என்ற சொற்றொடர்களைப் பிரித்தெழுதுக.

[ஈ] இச்செய்யுள்களிலிருந்து வினையெச்சம், பெயரெச்சம், வினைமுற்று என்பவற்றுக்கு ஒவ்வோர் உதாரணந்தருக.

[உ] நாலாஞ் செய்யுளிலுள்ள உவமான உவமேயங்களை விளக்கிக்காட்டுக.

4. பின்வருவனவற்றின் பொருள் விளங்க அவற்றைவாக்கியங்களில் அமைத்தெழுதுக:-

உறுதுணை, வாய்ப்பு, நடுநிலை, சிற்பம், குற்றேவல், அனுகூலம், விழிப்பு, முறையீடு, சூழ்ச்சி, துறவு.

5. பின்வருவனவற்றின் குறிப்புப் பொருள் நன்கு புலப்படுமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களிலமைத்தெழுதுக:-

முதலைக் கண்ணீர், நெருப்பெடுத்தல், மண்போடுதல், கங்கணம்கட்டுதல், தலையிடுதல்.

## யூ. என். பி. மகாநாடு

கொழும்பு, வெள்ளி

ஐக்கிய தேசிய கட்சியின் வருடாந்த மகாநாடு ஸ்ரீகொத்தாவில் நவம்பர் 30-ம் தேதி ஆரம்பமாகி இருதினங்கள் தொடர்ந்து நடைபெறும்.

அனுபவமுள்ள வைத்தியரின்
மேற்பார்வையில்
சித்த வைத்திய மருந்துகள்
ஆயுர்வேத மருந்துகள்
மருந்துச் சரக்குகள்
கிடைக்குமிடம்:
சுந்தரம் பிறதர்ஸ்
மருந்துக்கடை
[ புதியபஸ்நிலையத்துக்கு அருகாமை ]
73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.



அதிக வனப்பும்
எழிலும்
லாவண்ணியமும்
பெற
பொன்ட்ஸ்
வனிஷிங் கிறீம்

உங்கள் சருமத்தின் எண்ணெய்ப் பிசுக்கை அகற்றி, மாசுமறுக்களையும் குளிந்த மயிர்க் கண்களையும் மறைத்து, கரும்புள்ளிகள் உண்டாகாமல் காக்க வல்லது எண்ணெய்ப் பிசுக்கற்ற இதமான பொண்ட்ஸ் வனிஷிங் கிறீம்.

உங்கள் சருமத்தைப் பாதுகாத்து, சோபை யூட்டி காளுக்கு நாள் அதிக வனப்பும் எழிலும் லாவண்ணியமும் உடையோராகத் திகழவைப்பது பொண்ட்ஸ் வனிஷிங் கிறீம்.

உங்கள் சருமம் பட்டுப்போன்று மிருதுவாக இருக்க பொண்ட்ஸ் வனிஷிங் கிறீமைத் தனியே உபயோகியுங்கள் அல்லது உங்கள் முக ஒப்பனை மணிக்கணக்கில் மலர்ச்சியுடன் இருக்க இதனை ஓர் அஸ்திவாரப் பூச்சாக உபயோகியுங்கள்.




அழகெனும் அணிபுனைந்து சருமத்திற்குச் சோபையூட்ட
பொன்ட்ஸ் வனிஷிங் கிறீம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கேசன்துறையிலிருந்து

# 75,000 ரூ. மீன் கொழும்புக்கு ஏற்றுமதி

## ஒரே நாளில் சாதனை

— நமது நிருபர் வி. நவரத்தினராஜா—

காங்கேசன்துறை, சனி

காங்கேசன்துறைப் பகுதியிலுள்ள மயிலிட்டி, பலாலி, ஊரணி ஆகிய இடங்களிலிருந்து சென்ற வியாழக்கிழமை சுமார் 75,000 ருத்தல் மீன் கொழும்புக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை அங்கு அனுப்பப்பட்ட தொகையிலும்பார்க்க இது மிகவும் கூடுதலான தொகையென மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இங்கு பெய்த மழை, அதிக மீனை மீனவர்கள் பிடிப்பதற்கு உதவியதாகத் தெரிகிறது. கருவாடுபோடுவதற்குப் பயன்படும் 'கும்பிளா' என்ற ரக மீன் இதில் அதிகமாகப் பிடிக்கப்பட்டதாகவும் இங்கு பிடிக்கப்பட்ட மீன்கள் 6 லொறிகளில் ஏற்றி கொழும்புக்கு வியாழக்கிழமையன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தீண்டாமை ஒழிப்பு மகாநாடு

### சண்முகதாசன் பேச்சு

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஆலய சொந்தக்காரர்களும், தேநீர்க் கடை முதலாளிகளும், பலாத்காரத்தைப் பாவிக்கமுடியுமென்றால், அதை எதிர்த்து நியாயம் கோரும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் பலாத்காரம் பாவிப்பதில் தவறென்ன இருக்கிறது.

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில்நேற்று நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு வெகுஜன மகாநாட்டில் சீனகம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு, என். சண்முகதாசன் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க குழு தலைவர்களாக டாக்டர் சீனிவாசகம், திரு. கே. டானியல், திரு. முத்தையா ஆகியோர் தலைமையில் மகாநாட்டு நிகழ்ச்சிகள் நடந்தன முற்போக்குவாலிபர் சங்கப்பிரதிநிதிகளும், பல்கலைக்கழக மாணவர்களும் கலந்து கொண்டனர்.

திரு. என். சண்முகதாசன் மேலும் பேசுகையில் கடந்த வருடம் அக்டோபர் மாதம் தமது கட்சி தீண்டாமைக்கு எதிராக ஆரம்பித்த போராட்டத்தினால்தான் சிங்களமக்கள் வடபகுதியில்நிலவும் சாதிப் பாகுபாட்டை அறியமுடிந்தது. தீண்டாமை ஒழிப்பிற்கு வடபகுதியில் ஆதரவு பெருகுதற்குக்காரணம் நம் கட்சிதான்.

பலாத்காரத்தை பாவிக்கக்கூடாதென்று கூறுகிறார்கள். பலாத்காரத்தைஆலய சொந்தக்காரரும், தேநீர்க் கடை முதலாளிகளும்தான் பாவித்தனர். பலாத்காரம் என்பது ஆச்சரியப்படக் கூடியதொன்றல்ல. மண்ணில் புதைக்கப்பட்டவிதை பலாத்காரமூலம்தான் செடியாகவளருகிறது. முட்டைக்குள் இருக்கும் குஞ்சு, பலாத்காரம் மூலம்தான் வெளியில் வருகிறது. புதிய சமுதாயமொன்றை சிருஷ்டிப்பதற்குபலாத்காரம் முக்கியம்

திரு. கே. வைகுந்தவாசன் பேசும்போது கடந்த ஒரு வருட காலமாக இந்த இயக்கம் வட பகுதியில் வலுவடைந்துவிட்டதாகவும், தன்னைக்கூட மாற்றியுள்ளதாகவும், சமாதானம் மூலம் சக வாழ்வு காணலாமென்பது முட்டாள்தனமானவாதமென்றும், புரட்சி மூலமே புது வாழ்வு காணலாமென்றும் கூறினார்.

திரு. வி ஏ. கந்தசாமி பேசும்போது, அமைதியாக நடந்த போராட்டத்தில் பலாத்காரம் பாவிக்கப்பட்டதால்தான் நிலைமை மோசமானதென்றும் கொடிகாமம், அச்சுவேலி, சங்கானைப் பகுதிகளில் தொடர்ந்து தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் நடைபெறுமெனவும் கூறினார்.

சாவகச்சேரி முற்போக்கு வாலிபர் சங்கப் பிரதிநிதி திரு. கே. கிட்ணர், வண்ணார்பண்ணை முற்போக்கு வாலிபர் சங்கப் பிரதிநிதி திரு. கே. குணரத்தினம், திரு. வி. நாகலிங்கம் ஆகியோரும் பேசினர்.

இம்மகாநாட்டில் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

'எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் ஆரம்பமாகும். எந்தவிதமான போராட்டம் என்பதை நடவடிக்கைக்கமிட்டி உரிய காலத்தில் அறிவிக்கும். அதன் பின் போராட்டம் தொடர்ந்து நடைபெறும்' என்று யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த தீண்டாமை ஒழிப்பு வெகுஜன மகாநாட்டில் பிரகடனம் வெளியிடப்பட்டது.

## 'வாக்கு மூலத்தை அந்த மொழியிலேயே பதியுங்கள்'

### பொலிஸாருக்கு நீதிபதி அறிவிப்பு

குரும்பசிட்டி. சனி

மல்லாகம் நீதிமன்றத்தில் மாஜிஸ்திரேட்திரு. ரி. எஸ். நெத்தசிங்கா முன்னிலையில் மொழி சம்பந்தமான பிரச்னையொன்று ஏற்பட்டு சுமார் 30 நிமிட நேரத்திலேயே தீர்த்து வைக்கப்பட்ட சம்பவமொன்று கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இளவாலையைச் சேர்ந்த தில்லை சபாபதி என்பவர் அதே இடத்தைச்சேர்ந்த யோசேப் புலேந்திரன் என்பவரை கத்தியால் வெட்டிக் காயம் விளைவித்தார் என சங்கானைப் பொலிசார் தாக்கல் செய்திருந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மேற்படி சம்பவம் நிகழ்ந்தது.

எதிரி சார்பில் ஏற்பட்டிருந்த வழக்கறிஞர் திரு. ஸ்ரீதரன் இவ்வழக்கில் எதிரிக்கு எதிராக காயமடைந்தவர்பொலிஸுக்குகொடுத்த வாக்கு மூலத்தில் உறுதிப்படுத்தப் பெற்ற பிரதி தமக்குத்தனிச் சிங்களத்தில் வழங்கப்பட்டதாகவும் அதனைக்கொண்டு தான் வழக்கு நடத்தத்தயாரில்லைஎன்றும் நீதிபதியிடம் தெரிவித்தார் தமிழ்மொழி விசேஷ விதிகளின் படியும் ஒருவர் தொடர்பு கொள்ளும் மொழியிலேயே உறுதிப்படுத்தப் பெற்ற பத்திரங்கள் வழங்கப்படவேண்டும் எனவும், இதுகாறும் இல்லாத ஒரு நிலையை பொலிஸ் நிலையம் உண்டாக்கியிருப்பதாகவும் மேலும் தொடர்ந்து கூறினார்.

எதிரி ஒருவருக்கு தனக்கு எதிராக கொடுக்கப்பட்டிருக்கும் குற்றச் சாட்டு சம்பந்தமான வாக்கு மூலத்தை தனது தாய் மொழியில் கிடைப்பதற்கும் விளங்குவதற்கும் இருக்கின்ற உரிமையை நீதிமன்றங்கள் ஆரம்ப காலம் தொட்டே அனுசரிக்கத் தவறியதில்லை என்றும் திரு. ஸ்ரீதரன் மேலும் குறிப்பிட்டார்.

வழக்கறிஞர்கள் ஆர். ஜே. செல்வரத்தினம், ரி. தம்பிரத்தினம் ஆகியோரும் இதனைஅங்கீகரித்து பேசினர்

இதற்கிடையில் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலைய அதிகாரி திரு. ஸி. டயஸ் போதிய மொழிபெயர்ப்பாளர் இல்லாத காரணம் பற்றித் தெரிவித்தார். இது சம்பந்தமாக உத்தரவு பிறப்பித்த நீதிபதி ''ஒருவர் அளிக்கும் வாக்கு மூலத்தை அவர் கொடுக்கும் மொழியிலேயே பதிவதுதான் சிறந்தது. ஒரு எதிரி தனக்கு எதிராகவுள்ள குற்றச் சாட்டினை தான் புரிந்து கொள்ளக் கூடிய மொழியில் பெறுவதற்கு உரிமை உடையவர்'' என்றும் இதனைப் பொலிஸ் நிலையங்கள் நடைமுறையில் கொண்டு வர வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இப் பிரச்சனை காரணமாக வழக்கு விசாரணை டிசம்பர்மாதம் 2-ந்திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## காங்கிரசல்லாத முதல்வர் மாநாடு

### அண்ணா கலந்து கொள்ள மாட்டார்

சென்னை, ஒக். 21

நவம்பர் 10, 11-ந் திகதிகளில் இந்தூரில் பாரதீய கிராந்தி தளத்தின் ஆதரவில் நடைபெறவிருக்கும்காங்கிரசல்லாத முதல்வர்கள் மாநாட்டுக்கு தமிழக முதல்மந்திரிதிரு. சி. என். அண்ணாதுரைக்கும் அழைப்பு வந்தது. ஆனால், அவர் அதில் தாம் கலந்துகொள்வதற்கில்லையென்று தெரிவித்துவிட்டார். ஆயினும் ஒரு செய்தியை அனுப்ப ஒப்புக்கொண்டிருக்கிறார்.

## தர்மதாசா வென்றார்

கொழும்பு, சனி

பெல்மதுளை இடைத்தேர்தலில் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு. ஏ. தர்மதாசா 2785 அதிகபடியான வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்,

தேர்தல் முடிவுகள்:-

திரு. டபிள்யூ. ஏ. தர்மதாசா [சுதந்திரக் கட்சி]—12,627. திருமதி எஸ். எம். மொலமுரே (யு. என். பி.)—9,842.

## மேலும் மூன்று சிங்கள ஆசிரியர் பயிற்சிகல்லூரிகள்

கொழும்பு, சனி

சிங்கள ஆசிரியர்களுக்காக மேலும் மூன்று ஆசிரிய பயிற்சி கல்லூரிகளை கல்வி இலாகா ஆரம்பிக்கப்போவதாக இன்று கல்வி மந்திரி அறிவித்தார்.

## கள்ளக் கடத்தல்

### இருவர் கைது

காங்கேசன்துறை, சனி

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த புகையிரதத்தில் வந்த இருவர் கள்ளக் கடத்தல் சாமான்களுடன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். 10,000 ரூபா பெறுமதியான மணிக்கூடுப் பட்டிகள், 'பென்டன்கள்' நைலோன் காப்புகள், சங்கிலிகள் போன்ற பல பொருட்களை இவர்கள் கடத்தி வந்ததாக சுன்னாகம் பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் திரு. விஜயசூரியா இரு பெட்டிகளுடன் இவர்களைக் கைதுசெய்தார்.

கைப்பற்றப்பட்ட பொருட்கள் காங்கேசன்துறை சுங்க இலாகா தடுப்பு அதிகாரி திரு. எம். வீரசுந்தரத்திடம் ஒப்படைக்கப்பட்டன. கைது செய்யப்பட்ட இருவருக்கும் தலா 1,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் கைப்பற்றப்பட்ட பொருட்களும் பறிமுதல்செய்யப்பட்டன.

## செனட்டர்...

[-1ம் பக்கத் தொடர்ச்சி]

மதுளை தேர்தலுக்கு சென்ற பல எம். பி. கள் வெள்ளம் காரணமாக வரமுடியாமல் போனதே இதற்குக் காரணம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் திருவாளர்கள் டிக்மன் டி சில்வாவும், ஏ. பி. ஜயசூரியாவும் செனட்டர் பதவிக்கு போட்டிக்கு நிறுத்த முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. காலியான செனட்டர் பதவிகளுக்கான தெரிவு பார்லிமெண்டில் 23-ம் திகதிநடைபெறும்என்று தெரிகின்றது.

## 4 படகில் சென்ற மீனவர் திரும்பவில்லை

காங்கேசன்துறை, சனி

நேற்றைய தினம் மயிலிட்டியிலிருந்து ஆழ்கடலுக்கு இயந்திரப்படகு மூலம் சென்ற பல மீனவர்கள் கரை திரும்பவில்லையெனத் தெரிய வருகிறது.

சுமார் பதினைந்து இயந்திரப் படகுகள் மீன்பிடிக்கச் சென்றிருந்தது. இவர்களில் நான்கு இயந்திரப் படகில் சென்ற மீனவர்கள் செய்தி அச்சுக்குப் போகும்வரை கரை சேரவில்லை.

மீன்பிடிக்கச் சென்றுகரை திரும்பிய இயந்திரப் படகுகள் கடல்கொந்தளிப்பு நிலைமையால்கரையில்நங்கூரமிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்றிரவு இப்பகுதியில் கடும் மழையும் காற்றும் கடலும் கொந்தளிப்புமாக இருந்தது.

## 45,000 மாணவர் தோற்றுவர்

கொம்பனித்தெரு, சனி

அகில இலங்கையின் பல பாகங்களிலும்விவேகானந்த சபையினால் நடாத்தப்படும் சைவசமயபாடப் பரீட்சை இம்முறை நவம்பர் மாதம் 9-ம் திகதி நடைபெற இருக்கின்றது.

## கார் தயாரிப்பு தொழிற்சாலை

கொழும்பு, சனி

இலங்கையில்வெளிநாட்டு உதவியுடன் இரண்டாவது கார் தயாரிப்பு தொழிற்சாலையொன்றை நிறுவுவதற்கு அரசாங்கம் அனுமதியளிகவிருக்க்கிறது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள [illegible] 1967-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் [illegible] அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org